பக்கங்கள்:07

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 08 புதன்கிழமை 24.05.2023 கதிர்196

# போரில் உயிரிழந்தவர்கள் நினைவாகப் பொதுத் தூபி
## அமைப்பதற்கு ஆட்சியாளர்கள் முடிவு

**இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இடம்பெற்ற போர் மற்றும் மோதல்களில் உயிரிழுந்தவர்களை நினைவுகூரும் வகையில் கொழும்பில் நினைவுத்தூபி ஒன்று அமைக்கப்பட வுள்ளது.**

**அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன இன்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:**

**1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்ததில் இருந்து, மோதல்கள் மற்றும் உள்நாட்டுக் கலவரங்களில் ஏராளமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.**

**மோதல்கள் மற்றும் உள்நாட்டு அமைதியின்மையால் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூரும் வகையில் பொது நினைவிடம் ஒன்று அமைக்கப்படவேண்டியதன் அவசியத்தை இந்த ஆட்சி உணர்ந்துள்ளது.**

**கொழும்பில் பொருத்தமான இடத்தில் நினைவுச் சின்னத்தை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது - என்றார் அமைச்சர்.**

## இது ரகசியம் அல்ல!

அரசியலும் ஊடகமும் இரண்டறப் பின்னிப்பிணைந்தவை. ஊடகங்கள் அரசியல் செய்வதும் அரசியல்வாதிகள் ஊடகங்களைப் பயன்படுத்தி அரசியல் செய்வதும் உலகம் முழுவதும் வழக்கமானவை. அதேபோன்று ஊடகங்கள் அரசியல்வாதிகளை விமர்சிப்பதும் அரசியல்வாதிகள் சமயா சமயங்களில் ஊடகங்களை ஒரு பிடி பிடிப்பதும்கூட வழக்கமானதுதான். ஆனால் அரசியலில் நிரந்தரநண்பனும்கிடையாது நிரந்தரஎதிரியும் கிடையாது என்பது அரசியல்வாதிகளுக்கு மட்டுமல்ல ஊடகவியலாளர்களுக்கும் பொருந்தும். அப்படி ஏதாவது முரண்பாடு ஏற்பட்டால்கூட அதைக் காலாகாலத்தில் பேசித் தீர்த்து, சமாளித்து, அன்பளிப்பு என்று இதைக் கொடுத்து இரு தரப்பினருமே சரிசெய்துகொள்வார்கள். இதுதான் உலக வழக்கம்.

தமிழ்த் தேசிய முன்னணியினர் மட்டும் தாம் அதில் விதிவிலக்கு என்று ☞2

## சமூக ஊடகக் குற்றங்களை கண்காணிக்க தனிப் பிரிவு

ஒரு நபரின் தனியுரிமைக்கும் அவரின் நல்வாழ்வுக்கும் தீங்கு விளைவிக்கும் வகையில் சமூக ஊடகங்கள் செயற்படுமிடத்து, அது தொடர்பில் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டால், அவற்றை உடனடியாக விசாரிப்பதற்கான விடேட பிரிவொன்றை பாதுகாப்புப் பிரிவு தாபித்துள்ளது என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ☞2

## இரசாயனக் குண்டுகள் வீசப்படவில்லை நாடாளுமன்றில் சரத்வீரசேகர தெரிவிப்பு

இறுதிப் போரின் போது இரசாயனக் குண்டுத் தாக்குதல்கள் நடக்கவில்லை என்று பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரனை நோக்கி கேள்வியைத் தொடுத்த, அவர் பொய்யாக இராணுவத்தைச் சாடவேண்டாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பந்தயம், சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தின் போது உரையாற்றிய கூட்டமைப்பின் உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரவித்த ஒரு சில விடயங்களை மேற்கோள்காட்டி உரையாற்றுகையில் சரத்வீரசேகர இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மூன்று இலட்சம் தமிழர்களை ☞2

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள்; சுயாதீன விசாரணை அவசியம்
### ஐ.நா. மனித உரிமைகள் ஆணையரிடம் கர்தினால் வலியுறுத்து

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பில் வெளிப்படைத்தன்மையுடன் சுயாதீனமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஆணையர் வோல்கர் டேர்க்கிடத்தில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் கோரியுள்ளார்.

பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஆணையர் வோல்கர் டேர்க் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இச்சந்திப்பு தொடர்பில்; உயர்ஆணையர் வோல்கர் டேர்க் சமூக ஊடகத்தில் செய்துள்ள பதிவில், 2019 ஏப்ரல் மாதம் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியை கோரும் இலங்கையின் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்துடனான சந்திப்பு குறித்து பெருமையடைகின்றேன்.

இந்த மிலேச்சத்தனமான தாக்குதலின் முழுமையான பின்னணி குறித்து சுயாதீனமானதும் வெளிப்படைத்தன்மை வாய்ந்ததுமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பில் பரஸ்பரம் கலந்துரையாடினோம் என்று குறிப்பிட்டுள்ளார்

## அனைத்துப் பல்கலை மாணவர் ஒன்றியத்தினர் மீள ஆர்ப்பாட்டம்

களணிப்பல்கலைக்கழகத்தினுள் பொலிஸார் அனுமதியின்றி நுழைந்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அனைத்துப் பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் ஒன்றியத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

களணிப் பல்கலைக்கழகத்தின் முன்றலில் நேற்று ஒன்றுகூடிய அனைத்துப் பல்கலைக்கழக மாணவாகள் ஒன்றியத்தின் பிரதிநிதிகளும், களனி பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தின் பிரதிநிதிகளும் கூட்டிணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்தனர். ☞2

### இலங்கை இனப்படுகொலை தொடர்பான
## கனடா பிரதமரின் கருத்துக்கு விமல் வீரவன்ஸ கண்டனம்

இலங்கை தொடர்பில் கனடா நாட்டு பிரதமர் குறிப்பிட்ட கருத்து முறையற்றதென தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கனடாவில் வாழ்ந்த செவ்விந்தியர்கள் 1996 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட நிலையில், கனடா படுகொலை தினத்தை நாம் அனுஷ்டிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றம் நேற்றையதினம் சபாநாயகர் தலைமையில் ஆரம்பமாகி பிரதான நடவடிக்கைகள் நிறைவுக்கு வந்த நிலையில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர்தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

மே 18 இலங்கையில் இனப்படுகொலை இடம் பெற்றுள்ளதென குறிப்பிட்டு கனடா நாட்டு பிரதமர் இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தி எமது நாட்டை அவமதித்துள்ளார். இலங்கை தொடர்பில் கருத்துரைக்கும் கடனாவின் வரலாற்று பக்கத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

1996 ஜூன் மாதம் 21 கனடா நாட்டில் வாழ்ந்த செவ்விந்தியர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். கனடாவில் தான் உண்மையில் இனப்படுகொலை ☞2

## "அரசியல் அறிவே இல்லாதவர்"" சஜித் குறித்து தேரர் விமர்சனம்

சஜித் பிரேமதாச அரசியல் அறிவு இல்லாத நபர் என்று அத்தரகம பஞ்ஞாலங்கார தேரர் தெரிவித்துள்ளார்.

சஜித் பிரேமதாச புதிய அரசியல் கட்சியை ஆரம்பித்தமையும் அதனையடுத்து எடுத்த முடிவுகளும் அதனை உறுதிப்படுத்துவதாகக் குறிப்பிட்டார்

இணையத்தள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அனுரகுமார திஸாநாயக்க தலைமை யிலான தேசிய மக்கள் சக்திக்கு இம்முறை நாட்டை ஆட்சிசெய்யும் சந்தர்ப்பத்தை மக்கள் வழங்க வேண்டும்.

இலங்கை என்பது சிங்கள பௌத்த நாடு. ஜெரோம் பெர்னாண்டோ போன்ற அடிப்படைவாதிகள் அதனை அழிக்கும் சூழ்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். ஆகவே அதற்கு இடமளிக்காது மக்கள் கூட்டிணைந்து வாழவேண்டும். மாற்றத்தைக் காண்பதற்காக வாக்குகளை பயன்படுத்த வேண்டும் - என்றார்.

## மாணவர்கள் பேரணி மீது பேராதனையில் தாக்குதல்

பல்கலைக்கழக மாணவர்களுக்கு எதிரான அடக்கு முறைகளைக் கைவிடவேண்டும் என்று வலியுறுத்தி பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று நடத்திய ஆர்ப்பாட்டப்பேரணி மீது பொலிஸார் கண்ணீர்புகைக் குண்டுத்தாக்குதல் நடத்தியுள்ளனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் பிரயோகம், மாணவர்களுக்கு எதிரான அடக்குமுறை ஆகியவற்றுக்கு எதிராக பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

பேராதனை மாணவர் ஒன்றியக் கட்டடத்திலிருந்து தொடங்கிய இந்த மாணவர் பேரணி கண்டி நகருக்குள் நுழைய முயன்றபோது பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் வீதித் தடைகளை ஏற்படுத்தி அவர்களைத் தடுத்து நிறுத்தினர். எனினும் வீதித் தடைகளை உடைத்துக்கொண்டு மாணவர்கள் முன்னேறிச் செல்வதற்கு முனைந்த வேளையில் பொலிஸார் கண்ணீர்புகைக் குண்டுகளை வீசினார்கள்.

இதனால் மாணவர்கள் கலைந்து செல்லும் நிலைமை ஏற்பட்டது. பின்னர் மாணவர்கள், வீதியை இடைமறித்து போராட்டத்தினை நடத்தினார்கள். இதனால் ☞2

### அலி சப்ரி ரஹீம் எம்பியிடமிருந்து
## தங்கத்திற்கு மேலதிகமாக 91 அலைபேசிகளும் சிக்கின

சுங்கப்பிரிவினரால் கைது செய்யப்பட்ட ஆளும் கட்சி ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரிரஹீமிடம் தொடர்ச்சியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதோடு, அவரிடமிருந்து மீட்கப்பட்ட 3.5 கிலோ தங்கத்திற்கு மேலதிகமாக 91 அலைபேசிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று இலங்கைச் சுங்கத் திணைக்கள வருமான கண்காணிப்பும் 0தி

கைப்பற்றப்பட்ட தங்கம் மற்றும் அலைபேசிகளின் பெறுமதி 78.2மில்லியன் என்றும் இலங்கை சுங்கத்திணைக்களத்தின் வருமான கண்காணிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இதுதொடாபில் இலங்கை சுங்கத்திணைக்களத்தின் வருமானகண்காணிப்புபிரிவு நேற்று மாலை உத்தியோக பூர்வமாக அறிவித்தது,

நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரிரஹிம் சட்டவிரோதமானமுறையில் 3கிலோ 397 கிராம் எடையுடைய தங்கத்தை கொண்டு வந்த நிலையில், ☞2

## தையிட்டிக் கைதுகளுக்கு சுமந்திரன் எம்.பி. கண்டனம்

ந.லோகதயாளன்.

தையிட்டியில் ஜனநாயக முறைப்படி போராடியவர்களை கைது செய்தமையை வன்மையாக கண்டிப்பதாக நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:



தையிட்டியில் மக்களின் நிலத்தை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள விகாரையை அகற்றக்கோரி ஜனநாயக முறைப்படி இடம்பெற்ற போராட்டத்தில் பங்குகொண்ட 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை கைது செய்யும் சம்பிரதாயம்கூடத் தெரியாது அநாகரிகமான முறையில் கைது செய்ய முற்பட்டு நடுவீதியில் விட்டுச் சென்றமையினையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

கைது செய்யப்பட்ட ஒருவரின் சட்டத்தரணி அவரைப் பார்வையிட முடியும் என்பதே சட்ட ஏற்பாடாக இருக்கும் நிலையில் அதற்குகூட அனுமதிக்காது, மக்கள் செல்லமுடியாது தடுக்கப்படும் பகுதிக்குள் உள்ள பொலிஸ் நிலையத்தில் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டள்ளனர்.

சட்ட விரோதமான முறையில் இடம்பெற்ற இந்தக் கைதுகளையும் சட்டத்தை மீறும் பொலிசாரின் ஆராஜக நடவடிக்கையினையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம் - என்றார்.

## ஜூலை முதல் நலன்புரி உதவிகள் வங்கிக் கணக்கில் நேரடி வைப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் அமுல்படுத்தப்பட்டுள்ள 'அஸ்வெசும' நலன்புரிநன்மைகள், சமுர்த்தி மற்றும் முதியோர் உதவித் திட்டம் உட்பட தற்போது ஆட்சியால் வழங்கப்படும் நலன்புரி உதவிகளை ஜூலைமுதல் பயனாளிகளின் வங்கிக்கணக்கில் நேரடியாக வைப்பிலிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது.

நலன்புரி பயனாளிகள் தமது கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வதில் உள்ள சிரமங்களை கருத்திற் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வங்கிக்கணக்குகள் இல்லாத பயனாளிகளுக்கு வங்கிக் கணக்கு ஆரம்பிக்கத் தேவையான உதவிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் பி. விஜயரத்ன சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு தயாரிக்கும் '101 கதை' கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மக்களை மீட்பதற்காக ஜனாதிபதியினால் அமுல்படுத்தப்படும் சமூக பாதுகாப்பு வலையமைப்பின் ஒரு கட்டமாக, நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவின் மேற்பார்வையின் கீழ் நிதி அமைச்சு உள்ளிட்ட தொடர்புள்ள அமைச்சு அதிகாரிகளின் பங்களிப்புடன் 'அஸ்வெசும' நலன்புரிநன்மைகள் ☞2

## ஆலோசனை

புதிய மின்சாரச் சட்டம் தொடர்பாக, மின்சார சபை மறுசீரமைப்புக் குழு மற்றும் மறுசீரமைப்புக்கு உதவும் அபிவிருத்திநிறுவனங்களின் சட்ட மற்றும் எரிசக்தி ஆலோசகர்களுடனான சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

அதன்படி, அடுத்த வாரம், புதிய மின்சாரச் சட்டம், சட்டப்பூர்வ ஒப்புதல் மற்றும் மொழிபெயர்ப்புக்காக, சட்டசபைத் துறை ☞2

## மின் கட்டண அதிகரிப்பு ஒரு பாவச் செயல்
### முன்னாள் நீதியரசர் கண்டனம்

மின் கட்டணங்களைத் தொடர்ந்து அதிகரிப்பது பாவச் செயல் என்று முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேலும், தெரிவித்ததாவது:

2006ஆம் ஆண்டு மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டது. இதனால் வறிய மக்களுக்கு கிடைத்த நிவாரணம் இல்லாதுபோனது. அப்போது அதிகாரத்தில் யார் இருந்தார்கள் என்பதைக் கூற வேண்டியதில்லை.

அக்காலத்தில் குறித்த விடயம் நீதிமன்றத்திற்கு வந்தது. அப்போது நானே பிரதமநீதியரசராக இருந்தேன். குறித்த விடயத்தினை அங்கீகாரிக்க முடியாது என்றும் கூறினேன்.

அதுமட்டுமன்றி, ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காட்டப்போய் கடைசியில் பரிதாபப்பட்டுப்போனார்கள். நேற்று தையிட்டியில் சட்டவிரோத விகாரைக்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டத்தின்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் கைது செய்யப்பட்டபோதும் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனைப்பொலிஸார் குண்டுக் கட்டாகத் தூக்கித் திரிந்தபோதும் அதை ஆவணப்படுத்த, செய்தி சேகரிக்க அந்த இடத்தில் எந்தச் செய்தியாளரும் இல்லை. ஊடகவியலாளர்களும் இல்லை.

கடைசியில் முன்னணியின் ஆதரவாளர்கள் சமூக ஊடகங்களில் இது குறித்துக்குய்யோமுறையோ என்று அழுதுபுலம்ப வேண்டியதாகிப் போய்விட்டது. அப்போதும்கூட அவர்களின் குதர்க்கமும் ஈகோவும் விட்டுக்கொடுக்காமல் போனதால், பத்திரிகையாளர்களுக்கும் முன்னணிக்கும் இடையிலான விரிசல் இன்னும் பெரிதாகியிருக்கிறதேதவிரக் குறைந்தபாடாயில்லை.

இதே தையிட்டியில் விகாரைக்கு எதிராக முன்னணியினர் முதலில் நடத்திய போராட்டத்தின்போது அதைத் தலையில் தூக்கிப்பிடித்துக் காவித் திரிந்தவர்கள் ஊடகவியலாளர்கள்தான். மூன்றுநாட்கள் நடந்த அந்தப் போராட்டத்தின் முதல் நாள் இரவே முன்னணியினரைப் போராட்டக் களத்தை வட்டுக் கலைத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் மற்றும் சட்டத்தரணி காண்டீபன் ஆகிய இருவரையும் தனிமைப் படுத்தியும் பொலிஸார் தமது அடாவடிகளைத் தொடங்கியபோது, தமக்கு ஏதாவது நடந்தால் அது இந்த உலகிற்குத் தெரியவேண்டும் என்பதற்காகத் தம்மோடு கூட இருக்கும்படி ஊடகவியலாளர்களிடம் கோரிக்கை வைத்தவர்கள் முன்னணியினர்தான். ஆனால், போராட்டத்திற்கு வந்த மற்றைய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைவர்கள் தொடர்பில் முன்னணியினர் நடந்துகொண்ட விதத்தைத் தமது சமூக ஊடகங்கள் மூலம் அங்கிருந்த ஊடகவியலாளர்கள் சிலர் விமர்சித்ததை அடுத்து அவர்களைத் தூக்கி எறிந்து பகைத்துக் கொண்டனர்முன்னணியினர்.

வயதில் மிக மூத்த அரசியல் தலைவரான இரா.சம்பந்தன் உட்பட எதிர்த்தரப்பு அரசியல்வாதிகள் அனைவரையும் சகட்டு மேனிக்கு விமர்சிக்கும் முன்னணியினரால், தமது நடவடிக்கை தொடர்பில் அங்கிருந்த பத்திரிகையாளர்கள் தனிப்பட்ட விமர்சனம் வைத்ததை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. சில உண்மைகளை வெளியே விட்டதன் மூலம் போராட்டத்தின்மூலம்தமக்குக் கிடைக்கவேண்டிய அரசியல் பயனை மழுங்கடித்துவிட்டார்கள் என்ற கோபம் காரணமாக அவர்கள் அன்று தம்மோடு நின்ற ஊடகவியலாளர்களைபோராட்டத்தின் மூன்றாவது நாளே புறக்கணித்துத் தூக்கி எறிந்தார்கள்.

அத்தோடுநின்றிருந்தால் பரவாயில்லை. அதன் பின்னும்சமூக ஊடகங்களில் மீண்டும் மீண்டும் அந்த ஊடகவியலாளர்களைச் சீண்டிக்கொண்டேஇருந்தனர் முன்னணியின்அடிப்பொடிகள். விளைவுவிரிசல்பெரிதாகியது. நேற்றைய போராட்டம் பற்றிச் செய்தி சேகரிக்க எந்தவொரு செய்தியாளரும் அங்கு செல்லவில்லை.

இதே ஊடகவியலாளர்கள்தான் கடந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்து அவர்களைக் கடுமையாக விமர்சித்த முன்னணியை ஆதரித்து அதற்கு இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகள் கிடைக்க வழிவகுத்தார்கள்என்பதையும்அவர்கள் மறந்துவிட்டார்கள். மேலே ஏறிய பின்னர் உள்ளூர் ஏணிகள் அவர்களுக்கு இழுக்கமாகிவிட்டனபோலும். கொழும்புப் பத்திரிகை மற்றும் ஊடகங்களை வைத்துக்கொண்டு காலத்தைக் கடத்திவிடலாம் என்று நினைத்துவிட்டார்கள்போலும். அதன் விளைவையே நேற்று அவர்கள் அனுபவித்தார்கள்.

சட்டத்தரணி சுகாஸ் உட்பட 9 பேரைக் கைது செய்தும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனைக் கைது செய்ய முற்பட்டும் பொலிஸார் அடாவடித்தனம் புரிந்தபோதுதான் மீண்டும் அவர்களுக்கு உள்ளூர் ஊடகவியலாளர்களின் அவசியம் உறைத்திருக்கும். அந்தச் செய்திகள் வெளி உலகுக்குத் தெரியாமலே போய்விடும், ஆபத்துச் சூழ்ந்துவிடும் என்று அவர்கள் அச்சப்பட்ட தருணத்திலாவது கொஞ்சம் நிதானமாக நடந்துகொண்டார்களா என்றால் இல்லை. அப்போதும் ஊடகவியலாளர்களைக் கொச்சைப்படுத்தியும் கேவலப்படுத்தியுமே அவர்களின் சமூக ஊடகப் பதிவுகள் அமைந்தன. அதனால், அந்தரப்பட்டு நின்றது களத்தில் போராடிக் கொண்டிருந்தவர்கள்தான்.

இன்று முன்னணியினர் நிகழ்ச்சி நிரல் ஊடகவியலாளர்கள் என்றும் பணத்திற்குப் பின்னால் ஓடுபவர்கள் என்றும் விமர்சிப்பவர்களைக் கொண்டுதான் அரசியலில் முன்னணியினர் மேலே வந்தார்கள் என்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள். அவர்கள் இன்று முன்வைக்கும் விமர்சனங்களை நோக்கி அந்த ஊடகவியலாளர்களைத் தள்ளிவிட்டத்திலும் அவர்களுக்குக் கணிசமான பங்கு இருக்கின்றது. யாழ்ப்பாணத்தின் பாரம்பரியம்மிக்க கட்டுக்கோப்பான பத்திரிகை உலகத்தைச் சிதைத்து ஊடக உலகைஆளவேண்டும்என்று நினைத்தவர்கள் இன்று அதே ஊடகவியலாளர்களுடன் மல்லுக்கட்டிப் பரிதவித்து நிற்பதை என்னவென்று சொல்வது.

இதுவும் கடந்துபோகும் பாடங்களைக் கற்றுக் கொண்டால்.

**இடிமின்னல்**

## இரசாயனக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலை புலிகள் அமைப்பு பணயக் கைதிகளாக வைத்திருந்தபோது எங்கு சென்றீர்கள்? இறுதிக்கட்ட போர் தொடர்பில் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் குறிப்பிடும் கருத்து அடிப்படையற்றது. போரில் இரசாயன குண்டு தாக்குதல் நடத்தப்பட்டதாக குறிப்பிடுவது அடிப்படையற்றது.

இறுதிகட்டப்போரின்போது இரசாயன குண்டுத்தாக்குதல் நடத்தப்படவில்லை என்பது பல அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

படையினரால்தமிழர்கள் கொல்லப்பட்டார்கள் என்று குறிப்பிடுவதை ஒருபோதும் ஏற்க முடியாது. 295,000 தமிழர்களை பாதுகாத்தே இறுதிகட்ட யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

விடுதலை புலிகள் அமைப்பு 3 இலட்சம் தமிழர்களை பணய கைதிகளாக வைத்திருந்த போது இவர்கள் எங்கு சென்றார்கள். இன அழிப்பு என்று குறிப்பிட்டுக் கொண்டு இவர்கள் தான் தொடர்ந்து முரண்பாடுகளை ஏற்படுத்துகிறார்கள் - என்றார்.

## தங்கத்திற்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து இன்று கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட தங்கத்தின் பெறுமதி 74 மில்லியன் ரூபாவென கணிப்பிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினரின் பயணப் பையிலிருந்து 91நவீன (ஸ்மார்ட்) கையடக்கத்தொலைபேசிகள் கைப் பற்றப்பட்டுள்ளன. அவற்றின் சந்தைப் பெறுமதி 4.2 மில்லியன் ரூபாவென கணிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, டுபாயிலிருந்து நேற்றுக் காலை 9.45 அளவில் வருகைதந்த விமானத்தின் மூலம், நாடாளுமன்றஉறுப்பினர்அலிசப்ரி ரஹீம் நாட்டிற்கு வருகைத் தந்தார்.

அவ்வாறு வருகைத்தந்த நாடாளுமன்ற உறுப்பினர், விசேட பிரமுகவர்கள் பிரவேசிக்கும் நுழைவாயிலின் ஊடாகநாட்டிற்குள்பிரவேசிக்க முயற்சித்த சந்தர்ப்பத்தில் எமக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அவரிடம் சோதனை நடத்தப்பட்டது.

அதன்போது சட்டவிரேதமான முறையில் அவர் பொருட்களை நாட்டுக்குள் கொண்டு வருவதற்கு முயற்சித்தமை கண்டறியப்பட்டது - என்று தெரிவித்துள்ளது.

## ஆலோசனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் வழக்கறிஞர் துறையிடம் சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

குழு பிரதிநிதிகள் மற்றும் களத்தின் பங்குதாரர்கள் மேற்கொண்ட அவதானிப்புகளின் அடிப்படையில் முன்னர் திட்டமிடப்பட்ட காலக்கெடு மாற்றப்பட்டுள்ளது மற்றும் திருத்தங்களுடன் கூடிய புதிய சட்டமூலம் ஜூன் மாதம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதிசெயலணியின் தலைவர் மற்றும் மின்சார சபை மறுசீரமைப்பு குழுவின் உறுப்பினர்கள் மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களின் ஆலோசனை பிரதிநிதிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## கனடா .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம் பெற்றது. எனவே ஜூன் 21 அன்று நாம் 'கனடா இனப்படுகொலை தினம்' என நாடாளுமன்றத்தின் ஊடாக அனுஷ்டிக்க வேண்டும்.

இலங்கையில் இடம் பெறாத இனப்படுகொலையை கனடா அனுஷ்டிக்கும்போது கனடாவில் இடம்பெற்ற இனப்படுகொலையை நாம் அனுஷ்டிக்க வேண்டும். அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள்ஒன்றிணைந்து செயற்படவேண்டும்-என்றார்.

## மின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரித்த மின்சாரப் பட்டியல் கட்டணத்தில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறும், ஏற்கனவே இருந்த கட்டணத்தினைவறியமக்களுக்கு வழங்குமாறும் கூறினேன்.

அனைவரும்இணைந்து பேச்சுஷ நடாத்தி, பூச்சியத்திலிருந்து 30 அலகுகள்வரையில் குறைந்த விலையையும், 30இருந்து 60 அலகுகள் வரையில் சதாரண விலையையும் 60இலிருந்து 90வரையும் அதற்கு மேலாக பிறிதொரு விலையையும் நிர்ணயம் செய்யுமாறு குறிப்பிட்டேன்.

இதற்கான தீர்ப்பினை நாம் ஒக்டோபர் 22 வழங்கினோம். இந்தத் தீர்ப்பின் மூலம் அடிமட்ட மக்களின் உரிமைகளுக்கான நிவாரணம் வழங்கப்பட்டது.

சர்வதேசநாணயநிதியம் செலவுகளை ஈடுசெய்யுமாறு கோரியுள்ளது. இந்நிலையில் நீர் மின் உற்பத்தி ஊடாக மின்சாரத்தினைப் பெறுகின்றபோது அலகொன்றுக்கு 4 ரூபாவே செலவாகின்றது. அதற்கான இதர செலவுகளையும் இணைத்து 10 ரூபா அதிகமாக வைத்தால் பரவாயில்லை.

ஆனால், அமைச்சரின் கணக்கு வேறுவிதமாக உள்ளது. ஏற்கனவே 614 ரூபா 34சதமாக இருந்த அலகுக்கான கட்டணம் தற்போது 1,886 ரூபாவாக அதிகரித்துள்ளது. இதில் சேவைக்கட்டணமாக இருந்த 42 ரூபாவையும் இணைத்தக்கொண்டுள்ளனர்.

இவ்வாறு ஏற்கனவே உள்ள அதிகூடிய கட்டணத்தினை மேலும் உயர்த்துவது தான் அமைச்சரின் தற்போதைய திட்டமாக உள்ளது. தற்போது மின்சார கட்டணத்துக்காக அலகொன்றின் விலை 315 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனை மாற்றியமைக்குமாறே ஜனயக்க கோருகின்றார். எனது நிலைப்பாடும் அதுதான். மக்களுக்கு தேவையானவற்றை வைத்துவிட்டு ஏனையவற்றுக்கு ஒதுக்கிக் கொள்ளவேண்டும்.

இந்த விடயங்களை மாற்றாது தொடர்ச்சியாக விலைகளை அதிகரிக்கும் தீர்மானமானது பாவச் செயலாகும் - என்றார்.

## மாணவர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டி - கொழும்புக்கான போக்குவரத்து தடைப்பட்டது. அத்துடன் வீதியில் வாகன நெரிசல் ஏற்பட்டிருந்தது.

ஆர்ப்பாட்டத்தின்முடிவில் உரையாற்றிய பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தின் தலைவர் லஹிரு பெர்னாண்டோ, மாணவர்களை கண்காணிக்கும் ஆட்சியாளர்களின் தேவைக்கு அமைவாக பல்கலைக்கழக நிர்வாகம் சி.சி.டி.வி.கமராக்களை பூட்டுவதற்கு முனைகின்றது. இதற்கு எதிராகப் போராட்டம் நடத்தினோம். அதன்போது திட்டமிட்ட வகையில் எம் மீது அடக்குமுறை பிரயோகிக்கப்பட்டது. அதன் பின்னர் தொடர்ந்து அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன.

பல்கலைக்கழகத்தில் விடுதிகள் ஒழுங்காக இல்லை. சிற்றூண்டிச் சாலைகளில் விலைகள் அதிகமாக உள்ளன. ஆய்வுகூடங்கள் முறையாகப் பராமரிக்கப் படவில்லை. அவற்றையெல்லாம் விட்டு விட்டுசி.சி.டி.வி யாருக்காக பூட்டப்படுகின்றது - என்றார்.

## ஜூலை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நன்மைகள் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தின் கீழ், குறைந்த வருமானம் பெறும் 40 சதவீதம்மக்களுக்கு4பிரிவுகளில் நிதியுதவிவழங்கப்படவுள்ளது. மிகவும் ஏழ்மையான பிரிவில் உள்ள குடும்பத்திற்கு அதிகபட்சமாக மாதம் 15,000 ரூபாவை இந்த ஆட்சி வழங்கும்.

ஜூலை மாதம் முதல் அமுல்படுத்தப்படும் 'அஸ்வெசும' நலன்புரி நன்மை முறைமையின் காரணமாக சமுர்த்தி உள்ளிட்ட நலன்புரிப் நன்மைகளைப் பெற்ற சிலர் அந்தச்சலுகைகளைஇழக்கும் வாய்ப்புகள் இருக்கின்றன. நிரந்தரவருமானம்உள்ளமை, விண்ணப்பிக்காமை போன்றன காரணமாக இந்த இழப்பு ஏற்படலாம்.

அவ்வாறு பெயர் நீக்கப்பட்டவர்கள் இருந்தால், உதவித் தொகை பெறத் தகுதியானவர்களின் பட்டியல் வெளியிடப்பட்டவுடன், அது தொடர்பில் மேல்முறையீடு செய்யலாம்.முதல் முறை விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியாமல் போனவர்களுக்கு ஜூலை மாதத்திற்குப் பின்னர் இரண்டாம் கட்டமாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வாய்ப்பு உள்ளது. செய்தித்தாள்கள் மற்றும் ஊடகங்கள் மூலம் அது தொடர்பில் அறிவிப்போம் -என்றார்.

## சமூக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''குற்றச் செயல்கள், கொலைகள், வன்முறைகள், சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் துஷ்பிரயோகம் போன்றன ஊடகங்களால் எவ்வாறு கையாளப்படுகின்றன என்பது குறித்த விசேட ஆலோசனைக் குழுக் கூட்டம் ஒன்று எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த ஆலோசனைக் குழுவிற்கு ஊடகவியலாளர்களின் கருத்துக்களும்முக்கியமானது" என்றார் அமைச்சர்.

## அனைத்துப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது கண்டி, கொழும்பு வீதியில் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தோடு, நீர்த்தாரை வாகனங்களும், கண்ணீர் புகைக் குண்டுத் தாக்குதல் படையினரும்தயார்நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் எதிர்ப்பு போராட்டத்தின் இறுதியில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தின் புதிய ஏற்பாட்டாளர் மதுஷான் சந்திரஜித் கருத்து வெளியிடுகையில், களணி பல்கலைக் கழகத்தினுள் பொலிஸார் அத்துமீறி பிரவேசித்தமையைக் கடுமையாகக் கண்டித்தார்.

பொலிஸார் பல்கலைக் கழக வளாகத்துக்குள் பிரவேசித்தமைக்குத் துணைவேந்தர் பாதுகாப்பு கோரியதே காரணம் என்று கூறப்படுகின்றது. அவ்வாறு துணைவேந்தர் அழைத்தாரியின் அவர் அதற்காக வழங்கிய எழுத்துமூலமான ஆவணம் எங்கே? அதனைப் பொலிஸார்ஏன்மறைக்கவேண்டும்? மாணவர்களை அடக்குறைக்குள் வைத்திருக்கவே பொலிஸார் வரவழைக்கப்பட்டுள்ளனர் - என்றார்

சந்தைப்படுத்தல் துறையில் வேலை தேடுபவரா நீங்கள்?
குறித்த துறையில் ஒரு வருட கால அனுபவமிருந்தால் விண்ணப்பிக்கலாம்
ஹேலிஸ் குழுமத்தைச் சேர்ந்த சோலார் பேனல்களை இறக்குமதி செய்து விநியோகிக்கும் எமது நிறுவனத்திற்கு
வடமாகாணத்துக்கான விற்பனைப் பிரதிநிதிகள்
இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.
சிறந்த சலுகைகளுடன் கூடிய கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
உங்கள் விண்ணப்பத்தை இன்றே Whatsapp செய்யுங்கள்
076 412 98 30
s.ratheeshwaran@hayleyssolar.com

English Classes
K.Ganash (BA.Pera)
Spoken English With Grammar
யாழ் நாகரில் தனி வகுப்பு
G.C.E O/L, A/L, பட்டதாரிகள்
தொழில் புரிபவர்,
ஆர்வமுள்ளவர்களுக்கு
G.C.E O/L Literature
077 766 8725



10kg & 11kg க்கு மேல்

| சாதார சேவை (2-3 கிழமை) | | விரைவு (Express) (3-6 நாட்கள்) | |
|---|---|---|---|
| லண்டன் UK | 1200/- | கனடா Canada | 2950/= |
| பிரான்ஸ் France | 2100/= | நோர்வே Norway | 2950/= |
| ஜேர்மனி Germany | 1950/= | அவுஸ்ரேலியா Australia | 2450/= |
| சுவிஸ் Swiss | 2300/= | அமெரிக்கா USA | 2750/= |

அண்ணா விரைவுப் பொதிகள் சேவை
யாழ்ப்பாணம்
நல்லூர்
ஆவரங்கால்
கைதடி
கிளிநொச்சி
வவுனியா
திருகோணமலை
கொழும்பு
070 330 5500 075 330 5500 076 235 4367



# அம்பாறையில் குரங்குகளின் தொல்லையால் விவசாயம் பாதிப்பு என விவசாயிகள் கவலை

குரங்குகளின் தொல்லையால் நகர வர்த்தகர்கள், விவசாயிகள், பாதசாரிகள் பெரும் சிரமங்களை தினந்தோறும் எதிர்கொண்டு வருவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.



அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களில், மக்கள் நடமாடும் இடங்களில் தினமும் 300 இற்கும் மேற்பட்ட குரங்குகள் கூட்டமாக நடமாடுவதாகவும், இதன்போது பொதுமக்களுக்கு அவை தொல்லை தருவதாகவும் அந்தப்பிரதேசங்களை சேர்ந்தவர்கள் மேலும் கூறியுள்ளனர்.

அத்தோடு குரங்குகள் ஏற்படுத்தும் இடையூறுகளை தீர்க்கவும், குரங்குகளின் அதிகரிப்பை கட்டுப்படுத்தவும் உரிய அதிகாரிகளால் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்ற குற்றச்சாட்டையும் அவர்கள் முன்வைக்கின்றனர்.

இது தொடர்பில் மக்கள் மேலும்



கூறுகையில் -

அம்பாறை மாவட்டத்தில் சவளக்கடை, நாவிதன்வெளி, நற்பிட்டிமுனை, மருதமுனை, சேனைக்குடியிருப்பு, மணல் சேனை, பாண்டிருப்பு, பெரியநீலாவணை, மத்திய முகாம், சொறிக்கல்முனை, சம்மாந்துறை, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அட்டப்பளம், ஒலுவில், வளத்தாபிட்டி, அக்கரைப்பற்று, தம்பிலுவில், பொத்துவில், இறக்காமம் ஆகிய பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் விதைக்கப்பட்டுள்ள பயிர்களை சேதப்படுத்தி, வியாபார கடைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பொருள்களை நாசப்படுத்தி, விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பழங்களை உண்டு வியாபார நடவடிக்கைகளுக்கு குரங்குகள் இடையூறுகளை ஏற்படுத்துகின்றன.

குரங்குகள் கூட்டம் கூட்டமாக வீதிகளில் சஞ்சாரம் செய்து, அந்த வழியில் செல்கின்ற பாதசாரிகள் மற்றும் பயணிக்கும் வாகனங்களையும் இடைமறிக்கின்றன. இதனால் நிறைய விபத்துக்களும் ஏற்பட்டுள்ளன.

வீதியில் நாங்கள் பொருள்களை எடுத்துச் செல்லும்போது, கைகளில் வைத்திருக்கும் உணவுப்பொதிகளை பிடுங்கிச் செல்கின்றன.

குரங்குகளின் அட்டகாசத்தால் பல பகுதிகளிலும் மாணவர்கள் பெரும் அச்சத்துடனேயே பாடசாலைகளுக்குச் சென்று கல்விகற்கின்றனர்.

வீடுகளின் வாசற்பகுதிகளில் ஆடைகளை உலரவிடும்போது குரங்குகள் அவற்றையும் கொண்டு சென்றுவிடுகின்றன. இதனால் வீடுகளில் வசிப்பவர்களும் பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளும் சிரமப்படுகின்றனர்.

அம்பாறையின் உகண, தமன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீதிகளில் நிறுத்தி வைக்கப்படும் வாகனங்கள், பஸ்களில் ஏறி குரங்குகள் அட்டகாசம் செய்வதால் வாகன சாரதிகளும் பயணிகளும் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

அம்பாறையின் புறநகரங்களை அண்டிய மலைப் பிரதேசங்களில் உள்ள மலைப்பாங்கான இடங்களில் உள்ள குரங்குகள் அடிக்கடி ஊருக்குள் நுழைந்து தொல்லை கொடுக்கின்றன என கூறுகின்றனர்.

குரங்குகளால் ஏற்படும் இப்பிரச்சினைகளால் நகர வர்த்தகர்கள், விவசாயிகள், பாதசாரிகள் தினமும் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

அம்பாறையில் 300 இற்கும்



மேற்பட்ட குரங்குகள் மனித நடமாட்டமுள்ள இடங்களில் சுற்றித் திரிவதால், குரங்குகளின் தொல்லையை கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அத்துடன், குரங்குகளின் அட்டகாசத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் விவசாயத்தையே கைவிடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

குரங்குகளால் ஒவ்வொரு வருடமும் நேரடியாகவும் மறைமுகமாகவும் மில்லியன்கணக்கில் தாம் நஷ்டமடைவதாகவும், குரங்குகளின் நடமாட்டத்தால் விவசாயநிலங்கள் தரிசுநிலங்களாக மாறியுள்ளன எனவும் விவசாயிகள் மேலும் குறிப்பிடுகின்றனர்.

அது மட்டுமன்றி, குரங்குகள் விவசாய நிலங்களில் உள்ள பயிர்களை உண்பதுடன், பயிர்களை முழுவதுமாக அழித்து விடுவதே அப்பகுதி விவசாயிகளின் பெரும் பிரச்சினையாகக் காணப்படுகிறது.

மேலும், நகரங்களில் முறையாக அகற்றப்படாத திண்மக் கழிவுகளை சாப்பிட்டு, அதிக எண்ணிக்கையில் குரங்குகள் பெருகி வருகின்றன. இதனால் அந்தக்குரங்குகளிடமிருந்து விவசாயநிலத்தைப் பாதுகாப்பது சிரமமாக உள்ளதால் சில விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கைகளை கைவிட்டுள்ளதாகக் கூறுகின்றனர்.

அம்பாறையின் மலைப்பாங்கான இடங்களில் உள்ள குரங்குகள் ஊருக்குள் வந்து



செல்வதால், அப்பகுதி மக்களின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு பொலிஸார் மற்றும் வன அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அந்த மக்கள் கோரியுள்ளனர்.

நாட்டில் குரங்குகளால் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவரும் இச்சூழலிலேயே சர்வதேச குரங்குகள் தினம் ஆண்டுதோறும் டிசம்பர் 14ஆம் திகதி கொண்டாடப்பட்டு வருகிறது. அதுமட்டுமன்றி, சமீபகாலமாக குரங்குகள் நாட்டின் அரசியல் விவகாரங்களிலும் பேசுபொருளாகியுள்ளன.

அத்துடன், இலங்கையில் அதிகரித்து வருகின்ற குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் குரங்குத் தொல்லைகளை ஒழிப்பது தொடர்பாக சமூக வலைத்தளங்களில் பல்வேறு காணொளிகள், கருத்துப் பதிவுகள் வைரலாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# முஸ்லிம் திருமணச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரமுயற்சி!

## எச்சரிக்கை விடுக்கும் உலமா கட்சி தலைவர்

முஸ்லிம் திருமண சட்டத்தில் திருத்தம் கொண்டு வர முயற்சிக்கும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவின் எத்தகைய முயற்சிகளுக்கும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டாம் என ஐக்கிய காங்கிரஸ் கட்சி (உலமா கட்சி) தலைவர் முபாறக் அப்துல் மஜீத் மௌலவி கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுபற்றி அந்தக்கட்சி அனுப்பி வைத்துள்ள செய்தி குறிப்பில் தெரிவித்திருப்பவை வருமாறு -

முஸ்லிம் திருமண சட்டத்தை திருத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கும் இருபது பெண்களை நீதி அமைச்சர் அழைத்து அவர்கள் கோரிக்கையை ஏற்கவேண்டும் என முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த நாட்டில் பத்து லட்சத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம் பெண்கள் வாழும் போது வெறும் இருபது பெண்களின் கோரிக் கைக்கு பின்னால் நீதி அமைச்சர் செல்வதன் மூலம் இதன் பின்னணியில் சியோனிஸம் இருக்கிறதா என்ற சந்தேகத்தை தருகிறது என ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் சில வருடங்களுக்கு முன் முஸ்லிம் திருமண சட்டத்தை திருத்த வேண்டும் என கோரிக்கை விடுத்த முஸ்லிம் பெண் எழுத்தாளர் ஒருவர் தனது திருமணத்தை விவாகரத்து செய்து விட்டு தற்போது ஐரோப்பாவில் திருமணத்துக்கப்பால் லீவிங் டு கெதர் என வாழ்




வதையும் அதை பெருமையாக சமூக வலையத்தளங்களில் போடுவதையும் காண்கிறோம்.

முஸ்லிம் திருமண சட்டத்தை மாற்றும் கோரிக்கைகளுக்கு பின்னால் ஐரோப்பிய சக்திகள் உள்ளன. இவ்வாறு கோரிக்கை விடுவோரில் சிலரை ஐரோப்பிய நாடுகளின் என்ஜீஓக்கள் அழைத்து சலுகைகள் வழங்குவதன் மூலம் இவை தெளிவாகிறது.

இந்த நிலையில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலர் பத்து வருடங்களாக நாடாளுமன்றில் உண்டும் உறங்கியும் வாழ்ந்து சமூகத்தின் எந்தவொரு உரிமையையும் பெற்றுத்தர வக்கில்லாதவர்களாக இருக்கும் நிலையில் எமது மூதாதையர் பெற்றுத்தந்த முஸ்லிம் திருமண சட்டத்தில் கை வைத்து அதனை எதிர்காலத்தில் இல்லாமல் செய்யும் துரோகத்துக்கு ஒத்துழைக்க வேண்டாம் எனக் கோருகின்றோம்.

முஸ்லிம் திருமண சட்டத்தில் கைவைக்க முயன்ற கோட்டாபய ராஜபக்ஷ மிக கேவலமாக நாட்டை விட்டுதப்பியோடியதைக் கண்டோம். அதே போல் முஸ்லிம் திருமண சட்டத்தில் ஜம்மிய்யத்துல் உலமாவின் ஏகோபித்த அனுமதி இன்றி திருத்தம் கொண்டு வர முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முயன்றால் நிச்சயம் அவர்களுக்கும் இறை தண்டனை கிடைக்கும் என்பதுடன் எதிர்கால நமது சந்ததிகள் பதுவா செய்து சபிப்பார்கள் என்பதை எச்சரிக்கிறோம் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# மாணவிகளைத் துஷ்பிரயோகம் செய்த மற்றுமொரு ஆசிரியர் விளக்கமறியலில்

பாடசாலை மாணவிகளைத் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மற்றுமொரு மேலதிக வகுப்பின் ஆசிரியர் மே 29 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பொலனறுவைப் பகுதியில் உள்ள மேலதிக வகுப்பு ஒன்றின் ஆசிரியரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் முதல் பல சந்தர்ப்பங்களில் குறித்த ஆசிரியர் மாணவிகளைத் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளதுடன், துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் 6 மாணவிகளின் பெற்றோரினால் பொலனறுவை பொலிஸாரிடம் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சில பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளின் எதிர்காலம் குறித்த அச்சத்தில் பொலிஸாரிடம் முறைப்பாடு அளிக்காமல் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய 41 வயதான குறித்த ஆசிரியர் கைது செய்யப்பட்டு பொலனறுவை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அதேநேரம் இதேபோன்றதொரு சம்பவம் களுத்துறை பகுதியில் பதிவாகியிருந்ததுடன் 16 பாடசாலை மாணவிகளைத் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாக கூறப்படும் ஆசிரியர் கைது செய்யப்பட்டு இந்த மாதம் 26 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (02)

# மேர்வின் சில்வாவுக்கு எதிரான முறைப்பாட்டை விசாரணைக்கு எடுக்க நீதிமன்றம் உத்தரவு!

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குள் அத்துமீறி நுழைந்து அங்கு அசாதாரண நிலைமைகளை தோற்றுவித்த சம்பவம் தொடர்பில் நீதிமன்றில் முன்னிலைப்படுத் தப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிரான முறைப்பாட்டை எதிர்வரும் நவம்பர் மாதம் 7 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. .

மேற்படி முறைப்பாடு நேற்று (செவ்வாய்க்கிழமை) விசாரணைக்குஎடுத்துக் கொள்ளப்பட்ட போது, பிணையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா நீதிமன்றில் ஆஜரானார்.



சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

அதன்படி, நவம்பர் 7 ஆம் திகதி மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உத்தரவிட்ட நீதிமன்றம், வழக்குவிசாரணையின் முன்னேற்றத்தை அன்றைய தினம் நீதிமன்றத்தில் தெரிவிக்கவும் உத்தரவிட்டது. (05)

# ஜூலை அமுலுக்கு வரவுள்ள புதிய மின்சார கட்டணங்கள்!

## விவரங்கள் ஜூன் 30 இல் அறிவிப்பு

ஜூலை முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரவுள்ள புதியமின்சாரக்கட்டணங்கள் தொடர்பானவிவரங்கள்ஜூன் 30ஆம்திகதிஅறிவிக்கப்படும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க நேற்று (செவ்வாய்க்கிழமை) தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையால் சமர்ப்பிக்கப்பட்ட உத்தேச கட்டண திருத்தம் தொடர்பில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பதில் ஜூன் முதலாம் திகதி பகிரங்கப்படுத்தப்படும்.

இலங்கை மின்சாரச் சட்டத்தின் 30ஆவது பிரிவு மற்றும் பிரிவு 17 இன் படியே இவை வெளியிடப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (05)



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## படு மோசமான செயல்

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தங்கத்தைக் கடத்தி வந்தபோது சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருக்கிறார். தங்கம் மட்டுமல்ல அலைபேசிகள் பலவும் அவரால் கடத்தி வரப்பட்டுள்ளன என்கிறார்கள் அதிகாரிகள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் தனக்கு வழங்கப்பட்ட நாடாளுமன்ற வரப்பிரசாதத்தினைப் பயன்படுத்தி இத்தகைய முறைகேட்டில் ஈடுபட்டிருப்பது – குற்றத்தைப் புரிந்திருப்பது பேரதிர்ச்சியைத் தந்திருக்கின்றது.

மொட்டுக் கட்சி எனப்படும் பொது ஜன பெரமுன கட்சியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், கட்டுநாயக்கா வானூர்தி நிலையத்தில் அதிகாரிகளால் கைது செய்ப்பட்டபோது அவரிடம் 3.397 கிலோ நிறையுடைய தங்கக் கட்டிகள் இருந்தன என்று கூறப்படுகின்றது. சுங்கத் திணைக்களத்தின் விடுத்த ஒரு அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பெறுமதி 7 கோடி 40 லட்சம் ரூபாய்.

இதற்கு மேலதிகமாக 91 அலைபேசிகளும் அவரால் எடுத்து வரப்பட்டிருக்கின்றன என்று சுங்கத் திணைக்கள அறிக்கை கூறுகின்றது. இதன் பெறுமதி 42 லட்சம் ரூபாய். டுபாயிலிருந்து நேற்றுக் காலை 9.45 அளவில் வருகைதந்த வானூர்தி மூலம், நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் நாட்டிற்கு வருகைத் தந்தபோது கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

வழக்கமாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பயன்படுத்தும் சிறப்பு விருந்தினர் பாதைகளில் சுங்க அதிகாரிகளின் சோதனைக் கெடுபிடிகள் அதிகம் இருப்பதில்லை. மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் அவர்களுக்கு வழங்கப்படும் மரியாதை, சிறப்புக் கவனிப்பு அது. அந்த வழியாகவே நாடாளுமன்ற உறுப்பினர் ரஹிமும் வந்துள்ளார். அங்கு காத்திருந்த சுங்க அதிகாரிகள் அவரை மடக்கி சோதனையிட்டபோது தங்கம் மற்றும் அலைபேசிகளைக் கைப்பற்றினர்.

விருந்தினர்கள் பாதையில் அதிகாரிகள் நாடாளுமன்ற உறுப்பினரின் வருகைக்காகக் காத்திருந்து அவரைக் கைகயும் மெய்யுமாகப் பிடித்துள்ளனர் என்றால், அவரது வருகை குறித்து அவர்களுக்கு முன்கூட்டியே தகவல்கள் கிடைத்துள்ளன என்று அர்த்தம். அப்படி உறிதியான தகவலைக் கொடுக்குமளவிற்கு விவகாரம் இருக்கிறதென்றால், நாடாளுமன்ற உறுப்பினருக்கு இது முதல் தடவையல்ல என்றும் அர்த்தம்.

ஒரு மக்கள் பிரதிநிதி நாட்டுக்குள் தங்கத்தையும் அலைபேசிகளையும் கடத்தி வந்து வரி ஏய்ப்புச் செய்கிறார் என்றால், அதுவும் நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டுள்ள இந்தத் தருணத்தில் அவரால் இப்படிச் செய்ய முடிகின்றது என்றால், அது எவ்வளவு ஒரு மோசமான செயல். நாடாளுமன்ற உறுப்பினரின் இந்தச் செயல், ஏற்கனவே மக்கள் மத்தியில் இருக்கும் அரசியல்வாதிகள் எல்லோரும் கள்ளர்கள் என்கிற பொதுப் புத்திக்கு ஆணித்தரமான தீனி போடுவதாக அமைந்திருக்கின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்கனவே நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியயும் ஏராளமான வரப்பிரசாதங்கள் வழங்கப்படுகின்றன. அப்படியிருக்கும் போது, அவை போதாதென்ற வகையில் வழங்கப்பட்டிருக்கும் வரப்பிரசாதங்களை முறைகேடாகவும் பயன்படுத்தி பணம் பார்க்க இவர்களுக்கு என்ன தேவை வந்தது? ஏராளமான மக்கள் பட்டினியாலும் மந்த போசாக்கினாலும் பாதிக்கப்பட்டுள்ள ஒரு நாட்டில் மக்கள் பிரதிநிதி ஒருவர் இவ்வளவு மோசமான நடத்தையைக் கொண்டிருப்பது ஏற்புடையதல்ல.

இதனால் இந்த விவகாரம் வெளிப்படைத்தன்மையுடனும் நேர்மையுடனும் அரசியல் தலையீடுகள் எவையும் இன்றி விசாரிக்கப்பட்டு, வழங்கப்படும் தண்டனை மக்கள் பிரதிநிதிகள் இனியொருபோதும் இதுபோன்ற தவறுகளைச் செய்யப் பயப்படவைக்குமளவிற்கு இருக்கவேண்டும். அதுதான் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இழந்துபோயிருக்கும் அவர்களின் மானம் மரியாதையை மீண்டும் தூக்கி நிறுத்த வழி வகுக்கும்.

# வெளிநாடு பறந்தார் ரணில்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சிங்கப்பூர் மற்றும் ஜப்பானுக்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று அதிகாலை இலங்கையிலிருந்து புறப்பட்டார்.

சிங்கப்பூருக்கான தனது ஒரு நாள் விஜயத்தின் போது ஜனாதிபதி, சிங்கப்பூரின் சட்டம் மற்றும் உள்துறை அமைச்சர் கே. சண்முகம் மற்றும் அந்நாட்டின் பல உயர்மட்ட இராஜதந்திரிகளுடன் கலந்துரையாடல் நடத்தவுள்ளார்.

மே மாதம் 24 முதல் 27 வரை ஜனாதிபதியின் ஜப்பானுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, ஜப்பானிய பிரதமர் புமியோ கிஷிடாவுடன் கலந்துரையாடல் நடைபெறவுள்ளதுடன், ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை புதிய அணுகுமுறையின் ஊடாக வலுப்படுத்துவது குறித்தும், பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் தொடர்பாகவும் இதன்போது கருத்துப்பரிமாற்றம் இடம்பெறவுள்ளது.

அத்துடன், ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் யொசிமாசா ஹயாசி, நிதி அமைச்சர் சுனிவ் சுசுகி மற்றும் டிஜிடல்மயமாக்கல் தொடர்பான அமைச்சர் டரோ கொனோ ஆகியோரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

இதேவேளை, மே 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் டோக்கியோவில் நடைபெறும் ஆசியாவின் எதிர்காலம் தொடர்பான 28ஆவது சர்வதேச மாநாட்டில் ஜனாதிபதி உரையாற்றவுள்ளார்.

ஆசியாவின் எதிர்காலம் தொடர்பான சர்வதேச மாநாடு என்பது, ஆசிய - பசுபிக் பிராந்தியத்தின் அரசியல், பொருளாதாரம் மற்றும் பிராந்திய பிரச்சினைகள் மற்றும் உலகில் ஆசியாவின் பங்கு பற்றி பிராந்தியத்தின் தலைவர்கள் ஒன்றிணைந்து கருத்துக்களை பரிமாறிக்கொள்ளும் ஒரு பாரிய சர்வதேச மாநாடு ஆகும். ஜப்பானின் 'நிக்கெய்' செய்தித்தாள் 1995 முதல் ஆண்டுதோறும் இந்த மாநாட்டை ஏற்பாடு செய்து வருகின்றது.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜப்பான் - இலங்கை வர்த்தக ஒத்துழைப்பு கவுன்சில் மற்றும் ஜப்பானில் உள்ள இலங்கை வர்த்தக சம்மேளனத்துடன் பேச்சுகளை நடத்தவுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 2022 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்ஷோ அபேயின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காக ஜப்பானுக்கு விஜயம் செய்தார். தற்போதைய பதவிக்காலத்தில் ஜப்பானுக்கான ஜனாதிபதியின் இரண்டாவது விஜயம் இதுவாகும்.

ஜனாதிபதியின் ஜப்பான் விஜயம் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பையும் நட்புறவையும் மேலும் வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் தினுக் கொலம்பகே, ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் செண்ட்ரா பெரேரா ஆகியோரும் ஜனாதிபதியுடன் இந்த விஜயத்தில் இணைந்து கொண்டுள்ளனர். (02)

# பெருந்தோட்ட மக்கள் வாழும் பிரதேச செயலகப் பட்டியல்

## நிதி அமைச்சிடம் கையளிப்பு!



பெருந்தோட்ட மக்கள் வாழும் 102 பிரதேச செயலகப் பெயர்ப் பட்டியல், நிதி அமைச்சுக்கும் உலக வங்கிக்கும் கையளிக்கப்பட்டுள்ளது என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் மனோகணேசன் எம்.பி. தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

'மத்திய, மேல், சப்ரகமுவா, ஊவா, தென், வயம்ப ஆகிய 6 மாகாணங்களின் பதுளை, மொனராகலை, நுவரெலியா, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை, கொழும்பு (அவிசாவளை), களுத்துறை, குருநாகல், காலி, மாத்தறை ஆகிய 12 மாவட்டங்களில் அமைந்துள்ள 102 பிரதேச செயலகப் பிரிவுகளில் பெருந்தோட்டத் துறை அமைந்துள்ளது. இந்த பிரதேச செயலக பெயர் பட்டியலை, 'ஆறுதல்' (அஸ்வெசும) என்ற நலன்புரி திட்டத்துக்குப் பொறுப்பான நிதி இராஜாங்க அமைச்சுக்கும், இந்தத் திட்டத்துக்கு நிதி உதவி வழங்கவுள்ள உலகவங்கிக்கும்,



இன்று அனுப்பியுள்ளேன்.

மலையகத் தமிழர் என்றால் நுவரெலிய மாவட்டத்தில் வாழும் மக்கள் மட்டுமல்ல. அதுபோன்று, பெருந்தோட்ட மக்கள் என்றால் அது நுவரெலிய மாவட்டத்தில் வாழும் மக்கள் மட்டுமல்ல. நுவரெலியா முதல் கொழும்பின் அவிசாவளை, பாதுக்கை வரை 12 மாவட்டங்களில் பெருந்தோட்டங்கள் அமைந்துள்ளன. அதேவேளை இந்த நலன்புரித் திட்டம், தோட்ட தொழிலாளருக்கு மாத்திரம் வழங்கப்படும் ஒரு திட்டமும் அல்ல. ஆகவே, பெருந்தோட்டங்களில் எத்தனைபேர் தொழிலாளர்கள் என்ற கணக்கு இங்கே அவசியமில்லை.

இன்று பெருந்தோட்டங்களில் வாழும் மக்களில், பெரும்பான்மையோர் தோட்டத்தொழிலாளர் அல்ல. ஆகவே, பெருந்தோட்டங்களில் வாழும் குடும்பங்களை, அவர்கள் அங்கே தொழில் செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும் சரி, வறுமை நிலைமையை மாத்திரம் கணக்கில் எடுத்து, அவர்களுக்கு நலன்புரி திட்டத்தில் இணைந்துக்கொள்ள வாய்ப்பு வாய்ப்பு வேண்டும்.

நாட்டின் ஏனைய சமூக குடும்பங்களுக்கு வழங்கப்படும் வாய்ப்புகள் எமது குடும்பங்களுக்கும் வழங்கப்பட வேண்டும். எமது இந்த நிலைப்பாட்டை உலக வங்கியும், நிதி இராஜாங்க அமைச்சும் ஏற்றுக்கொண்டுள்ளன.

நாட்டின் வறுமை அதிகமான மாவட்டங்களில், மலையகம் மற்றும் பெருந்தோட்ட மக்கள் அதிகமாக வாழும் நுவரெலியா மாவட்டம் முதல் வரிசையில் உள்ளது. இந்நிலையில், இதுவரை சேகரிக்கப்பட்ட பெருந்தோட்ட துறை சார்ந்த தரவுகளில், மாவட்டத்தின் பெருந்தோட்ட ஜனத்தொகை விகிதாசாரம் சரியாகப் பொருந்தவில்லை. நேற்று நிதி இராஜாங்க அமைச்சில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது, அமைச்சர் செஹான் சேமசிங்க எமக்கு வழங்கிய தரவுகளில் இது தெரிந்தது.

ஆகவே, நுவரெலியா மாவட்டத்திலேயே இன்னமும் விண்ணப்பிக்காத பெருந்தோட்ட மக்கள் இருக்கிறார்கள். அதேபோல்தான் ஏனைய மாவட்டங்களில் நிலைமை நிலவுகிறது. இதை சரி செய்து நாட்டின் ஏனைய மக்களுக்கு வழங்கப்படும் வாய்ப்புகள், எமது மக்களுக்கும் பாரபட்சமின்றி வழங்கப்பட வேண்டும் என்பதற்காகவே தமிழ் முற்போக்குக் கூட்டணி போராடுகின்றது.

உலக வங்கி, நிதி அமைச்சு, ஜனாதிபதி ஆகிய தரப்புகளுடம் நாம் தொடர்ந்து பேசுகிறோம் என்பதைப் புரிந்துக்கொள்ளாமல், சம்பந்தப்பட்ட விடயத்தில் தெளிவும் இல்லாமல் இதுபற்றி பேசி இதை யாரும் குழப்பக் கூடாது.

இனி நாம் செய்ய வேண்டியது பற்றிய தெளிவு இருக்க வேண்டும். நலன்புரி உதவிக்கு விண்ணப்பிக்க, பெருந்தோட்ட பிரதேசங்களில் வாழும் அனைத்து குடும்பங்களுக்கும் வாய்ப்பு வேண்டும்.

102 பிரதேச செயலக பிரிவுகளிலும் உள்ள பெருந்தோட்ட துறையில் இது நிகழ வேண்டும். ஒரு வீட்டில் வசிக்கும், திருமணமான வெவ்வேறு குடும்பங்களையும் வெவ்வேறாக கணக்கெடுக்க வேண்டும்.

வழங்கும் நிதி உதவி, பெருநர்களின் வங்கி கணக்குகளுக்கு நேரடியாக வைப்பு செய்யப்பட வேண்டும். வங்கி கணக்கு இல்லாதவர்களுக்கு அரசு வங்கிகளில் உடனடியாக விதிகளை தளர்த்தி கணக்குகள் ஆரம்பிக்க இடந்தர வேண்டும்.

'ஆறுதல்' (அஸ்வெசும) என்ற நலன்புரி திட்டத்தில் பெருந்தோட்ட நிர்வாகங்களுக்கு, அரசியல் கட்சிகளுக்கு, தொழிற்சங்கங்களுக்குத் தேவையின்றி தலையிட இடம் கொடுக்க கூடாது. அவ்வளவுதான்.'-என்றார். (02)

# ஏழ்மையான நாடுகளின் பட்டியலில் இலங்கையும்

பொருளாதார நெருக்கடியானது ஆசியாவின் 20 ஏழ்மையான நாடுகளில் இலங்கையையும் சேர்த்துள்ளது. இன்சைடர் மொங்கி என்ற தளத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, இலங்கை, வளர்ந்து வரும் ஒரு நாடாக வகைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், தற்போது அதன் நாணயமதிப்பிழப்பு, அதிகரித்து வரும் பணவீக்கம் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் கடுமையான தட்டுப்பாட்டால் மனிதாபிமான அவசர நிலை போன்ற பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டு நிலைவரப்படி தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையில் ஆசியாவின் ஏழ்மையான நாடுகளில் ஒன்றாக இலங்கை இருப்பதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட நிதி ஆதாரங்கள், இந்த அளவீட்டின் அடிப்படையில் ஆசியாவிலுள்ள 20 ஏழ்மையான நாடுகளைத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாகக் குறித்த தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வறுமையானது உணவு, சுத்தமான நீர், சுகாதாரம், கல்வி, வீட்டுவசதி மற்றும் சமூக சேவைகள் போன்ற அடிப்படைத் தேவைகளுக்கான அணுகல் உட்படப் பல பரிமாணங்களையும் உள்ளடக்கியுள்ளது. (02)



OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் அதி வேகமாக விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ். பல்கலைக்கு பிரி. தூதுவர் வருகை

இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் சராஹுல்ரன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு சம்பிரதாய பூர்வ பயணம் மேற்கொண்டார்.

யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரித்தானிய தூதுவர் சரா ஹுல்ரன், இந்தியா மற்றும் இந்து சமுத்திரப் பிராந்தியத்துக்கான இயக்குநர் பென் மெலோர் ஆகியோர் நேற்றுப் பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்தனர். இந்தச் சந்திப்பின் போது யாழ். பல்கலைக்கழகத்தின் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, பதிவாளர் வி. காண்டீபன் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.







சமகால விவகாரங்கள், பிரித்தானியாவுக்கும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கும் இடையிலான கல்விசார் உடன்படிக்கைகள் பற்றிக் கேட்டறிந்த பிரித்தானியத் தூதுவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இலவசமதிய உணவு வழங்கப்படும் சமுதாயச் சமையலறைக்கும் சென்று பார்வையிட்டார்.

# ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் சிறுமி புலோலியில் வைத்துகைது

ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் 16 வயது சிறுமி ஒருவரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

யாழ்.முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின்படி பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புலோலி பகுதியில் திங்கட்கிழமை சுற்றிவளைப்பு மேற்கொள்ளப் பட்டது. இதன்போதே 5 கிராம் ஹெரோயின் மற்றும் 500 மில்லிகிராம் போதைப்பொருளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் சிறுமி கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். (05)

# மேலும் ஒரு வருடகாலத்துக்கு வாகன இறக்குமதி வேண்டாம்

## கோரிக்கை விடுத்தார் மைத்திரிபால

நாட்டின் நிதிப்பிரச்சினை தீரும் வரையில் அதிசொகுசு வாகனங்கள் இறக்குமதி செய்யப்படுவதை இன்னும் ஒரு வருடத்திற்கு நிறுத்துமாறு ஆட்சியாளர்களிடம் கோரிக்கை விடுப்பதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றைய தினம் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி சட்டமூலத்தின் கீழ் கட்டளை உட்பட சில வரி கட்டளைகள் தொடர்பான விவாதத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் இருக்கும் வாகனங்கள் போதுமானது. அதி சொகுசு வாகனங்கள் இறக்குமதி செய்யப்படுவதை ஐந்தாண்டுகளுக்கு நிறுத்துமாறு கோருகிறேன்.

அதி சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்யப் பெருந்தொகையான அந்நியச் செலவாணி செலவாக்கின்றது. அந்நிய செலவாணி கையிருப்பு குறைய இது முக்கியமானன காரணமாக உள்ளது.

அதேவேளை உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிட வேட்பு மனுக்களை தாக்கல் செய்த அரச ஊழியர்களுக்கு ஐந்து மாதங்களாக சம்பளம் இல்லை.

இவர்களில் சிலர் தற்கொலை செய்துக்கொள்ளும் செய்திகள் கிடைக்கலாம். ஆட்சியாளர்கள் இது குறித்துக் கவனம் செலுத்த வேண்டும்.

மதுபானம், போதைப்பொருள் இன்றி உடல் நடுங்கும் பிள்ளைகள் நாட்டில் உள்ளனர். அமைச்சர் டிரான் அலஸுக்கு போதைப் பொருள் கடத்தல்காரர்களால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக நான் செய்தியை ஒன்றைப் பார்த்தேன்.

என்னைக் கொலை செய்ய



போதைப்பொருள் கடத்தல்காரர்கள் அன்று பலவற்றை செய்தனர். நான் போதைப்பொருள் விற்பனையாளர்களுக்குத் தூக்குத்தண்டனை விதித்தேன்.

மதுபானங்கள் மற்றும் சிகரட்டுக்களின் விலைகளை அதிகரிப்பது நல்லது. போதைப் பொருள் தடுப்பு குறித்து கூடிய கவனம் செலுத்த வேண்டும். பாடசாலை மாணவர்களை போதைப் பொருளில் இருந்து காப்பற்றவேண்டும் -என்றார்.

# கடமையைப் பொறுப்பேற்றார் புதிய நாடாளுமன்றச் செயலர்

நாடாளுமன்ற செயலாளர் நாயகம் பதவிக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட குஷானி ரோஹணதீர நேற்றைய தினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.



புதிய பதவியில் தனது கடமைகளைப் பொறுப்பேற்பதற்காகக் காலை நாடாளுமன்றத்துக்கு வருகை தந்த ரோஹனதீரவை, உதவிச் செயலாளர்களான டிக்கிரி கே. ஜயதிலக மற்றும் ஹங்ச அபேரத்ன ஆகியோர் வரவேற்றனர்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் புதிய செயலாளர் நாயகம் பதவிச் சத்தியம் செய்துகொண்டதுடன், மகா சங்கத்தினர் ஆசீர்வதித்து மத அனுஷ்டானங்களை மேற்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டு, சபாநாயகரினால் சான்றுரைப் படுத்தப்படவுள்ள ரத்தனதிஸ்ஸ அறக்கட்டளை (கூட்டிணைத்தல்) சட்டமூலத்தின் உண்மைப் பிரதியில் கையொப்பமிட்டு அவர் தனது கடமைகளை ஆரம்பித்தார்.

நாடாளுமன்றத்தின் முன்னாள் செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க, குஷானி ரோஹணதீரவின் குடும்ப உறுப்பினர்கள், பாராளுமன்றத் திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் இச்சந்தர்ப்பத்தில் பங்கேற்றிருந்தனர்.

இதேவேளை நேற்றுக் காலை 9.30 மணிக்குப் நாடாளுமன்ற அமர்வு ஆரம்பமாகும்போது படைக்கலசேவிதர் முன்செல்ல சபாநாயகர், செயலாளர் நாயகம் உள்ளிட்ட செயலாளர்கள் குழுவினர் சபா மண்டபத்துக்குள் வருகை தந்தனர்.

பின்னர், அரசமைப்பின் 65(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நாடாளுமன்ற பணியாட்தொகுதிப் பிரதானியாகவும் பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகமுமாக பதவி வகித்த குஷானி அனுராஷா ரோஹணதீர 2023 மே 23 முதல் நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் பதவியில் நியமிக்கப் பட்டுள்ளார் எனச் சபாநாயகர் சபையில் அறிவித்தார்.

அத்துடன், நாடாளுமன்றச் செயலாளர் நாயகமாக பதவி வகித்த தம்மிக தசநாயக்க 2023 மே 23 முதல் தனது பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார் என்பதையும் சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்.

ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியை அம்பலாங்கொட தர்மாஷோக்க கல்லூரியில் பூர்த்தி செய்த இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் உயிரியல் விஞ்ஞானத்தில் இளவிஞ்ஞானமானிப் பட்டத்தையும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டமானிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

நாடாளுமன்றத்தில் தனது சேவையை 1999 ஆரம்பித்த இவர், தற்போதைய நியமனத்தைப் பெறுவதற்கு முன்னர் நாடாளுமன்றத்தின் பல்வேறு அலுவலகங்களில் உதவிப் பிரதான உத்தியோகத்தர், பிரதிப் பிரதான உத்தியோகத்தர், உதவிச் செயலாளர் நாயகம், பதவியணித் தலைமை அதிகாரியும், பிரதிச் செயலாளர் நாயகம் ஆகிய பதவிகளை வகித்துள்ளார்.

# கோட்டாபயவால் வீழ்ந்த நாட்டை மீட்டெடுத்து வருகின்றார் ரணில்

## - மொட்டு எம்.பி. புகழாரம்

'கோட்டாபய ராஜபக்சவால் நாடு வங்குரோத்து அடைந்திருந்த நிலையில் நாட்டைப் பாரமேற்று நிலைமையைச் சரி செய்து வருகின்றார் ரணில் விக்கிரமசிங்க.'

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத்குமார தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

'குடும்ப அரசியல் தப்பில்லை. உலகிலும் அந்த நடைமுறை உண்டு. அவர்கள் தகுதியானவர்கள் என்றால் அவர்களை மக்கள் தெரிவு செய்வது ஜனநாயகம். இல்லையென்றால் மக்கள் நிராகரிப்பார்கள்.

ஆனால், ஒரு குடும்பம் மாத்திரமே ஆட்சியை நடத்த வேண்டும் என்று கூறுவது பிழை. மக்கள் விரும்பினால் அவர்களைத் தெரிவு செய்வார்கள்.

கோட்டாபய ராஜபக்சவால் நாடு வங்குரோத்து அடைந்திருந்த நிலையில் நாட்டைப் பாரமேற்று நிலைமையைச் சரி செய்து வருகின்றார் ரணில் விக்கிரமசிங்க. நான்கு வருடங்களுக்குப் பின் புது வருடத்தைக் கொண்டாடுவதற்கும் மே தினத்தைக் கொண்டாடுவதற்கும் வெசாக் தினத்தைக் கொண்டாடுவதற்கும் எம்மால் முடிந்துள்ளது. இந்த நிலைமையை ஏற்படுத்தியவர் ரணில் விக்கிரமசிங்க.

கோட்டாபயவின் ஆட்சியில் இருந்த மின் வெட்டு, எரிபொருள் தட்டுப்பாடு எவையும் இப்போது இல்லை. பொருட்களின் விலைகள் கட்டங்கட்டமாகக் குறைந்துகொண்டு செல்கின்றன.

யார் நல்லது செய்தாலும் அதைப்பாராட்டியே ஆகவேண்டும். அதேவேளை, அவர் பிழையான வழியில் சென்றால் அவரை விமர்சிப்பதற்குத் தயங்கமாட்டோம்.

ஆரம்பத்தில் நாங்கள் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வதை விரும்பவில்லை. யாருக்கும் கடன்படாமல் நாட்டைக் கொண்டு செல்வதற்கே முயற்சி செய்தோம்.

இறுதியில் முடியாத கட்டத்தில் சர்வதேச நாணய நிதியத்திடம் சென்றோம். வெற்றியும் கண்டோம்.



இன்று நாட்டின் பொருளாதார நிலை கட்டங்கட்டமாக முன்னேறி வருகின்றது. ரணில் ஜனாதிபதியானதும் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளது. வங்குரோத்து அடைந்த நாடு என்ற நிலையில் இருந்து தப்பியுள்ளோம். இதனால் சர்வதேச நிதி நிறுவனங்கள், நாடுகள் எங்களுக்குக் கடன் வழங்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் காலத்தில் எமது நாட்டுக்கு மேலும் கடன் கிடைக்கவுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி ஆகியன இணைந்து இந்த உதவியை வழங்கவுள்ளன. மின் கட்டணம் இப்போது தாங்க முடியாத நிலையில் உள்ளதை நாம் அறிவோம். இந்த நிலை இப்படியே இருக்கப்போவதில்லை. எதிர்காலத்தில் குறைப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.' - என்றார்.




# மேலதிக வகுப்புகளுக்கு நேற்று முதல் தடை

2022ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத்தராதர சாதாரண தர பரீட்சையுடன் தொடர்புடைய மேலதிக வகுப்புகள், கருத்தரங்குகள், முன்னோடி பயிற்சிகள் உள்ளிட்ட அனைத்து செயற்பாடுகளும் நேற்று நள்ளிரவுடன் தடை செய்யப்படுவதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சாதாரணதர முன்னோடி பரீட்சை வினாத்தாள்களை அச்சிடுதல், பகிர்ந்தளித்தல், கையேடுகளை விநியோகித்தல், இலத்திரனியல் ஊடகங்களினூடாக தகவல்களை பரிமாறுதல் உள்ளிட்ட செயற்பாடுகளுக்கும் தடை விதிக்கப்படவுள்ளது.

இந்த தடையை மீறும் நபர்கள் அல்லது நிறுவனங்கள் தொடர்பில் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென பரீட்சைகள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

2022ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரணதர பரீட்சை மே 29 முதல் எதிர்வரும் ஜூன் 8 வரை 3,568 பரீட்சை மத்திய நிலையங்களில் நடைபெறவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

**வயல் காணி விற்பனைக்கு**

மறுவன்புலவில் (தனங்கிளப்பு அருகில்) பிரதான வீதிக்கு அருகில் 19 பரப்பு வயல் காணி விற்பனைக்குண்டு. பரப்பு ஒரு இலட்சம், தரகர் தேவையில்லை தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி இலக்கம் : 0773112692

காலைக்கதிர் Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.05.2023இல் வெளியிடப்பெற்றது.

இத்துடன் நேற்றைய மாலைப்பதிப்பின் பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 04

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 08 செவ்வாய்க்கிழமை 23.05.2023 கதிர் 66

## ஆடைத் தொழிற்றுறை வீழ்ச்சி!

இலங்கையின் ஆடை உற்பத்தித்தொழில்துறைஇந்த ஆண்டு கடும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது என்று புள்ளி விவரங்கள்தெரிவிக்கின்றன.

இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஆடை ஏற்றுமதி மூலம் கிடைத்த வருமானம் 318 மில்லியன் அமெரிக்க டொலர்கள். இது கடந்த ஆண்டுஏப்ரலில்ஈட்டிய526 மில்லியன் டொலர்களுடன் ஒப்பிடுகையில் 24 சதவீத வீழ்ச்சியாகும்.

இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் ஆடை ஏற்றுமதி மூலம் கிடைத்த வருமானம்கடந்தவருடத்தின் முதல் நான்கு மாதங்களில் கிடைத்த வருமானத்தைவிட 17% குறைந்துள்ளது.

ஏப்ரல்2018க்குப்பிறகு, ஆடைத் துறையானது இந்த ஆண்டு ஏப்ரல் 2

## சிங்களக் குடியேற்றங்களுக்காகவா மாகாவலி 'ஜெ' வலய உருவாக்கம்?

### உண்மையைப் பகீரங்கப்படுத்த சுரேஷ் வலியுறுத்து

வவுனியாவடக்குபிரதேச செயலாளர் பிரிவையும் முல்லைத்தீவு மாவட்டத்தை யும் மையப்படுத்தி மகாவலி 'ஜெ' வலயம் என்ற பெயரில் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையினால் புதிய வலயம் ஒன்றைத் தோற்றுவிக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றது. ஏற்கனவே மகாவலி ஆற்றின் நீர் வடக்கு மாகாணத்திற்கு வருவதற்கு சாத்தியமேயில்லை என்று மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையினர் தெரிவித்துள்ள நிலையில் புதிதாக உருவாக்கப்படும் 'ஜெ' வலயத்தின் உண்மையான நோக்கம் என்ன என்பதை ஆட்சியாளர்கள் விளக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஈபிஆர்எல்எவ் கட்சித் தலைவர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன். வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை உருவாக்குவதற்கான முயற்சியா இது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

இலங்கை சுதந்திரமடைந்த பின்பு, பல இலட்சம் மலையகத் தமிழர்களை நாடற்றவர்களாக்கி, அவர்களை நாடு கடத்தினீர்கள். பின்னர் இனக்கலவரங்கள் என்ற பெயரில் தென்பகுதியில் இருந்த தமிழ் மக்களைக் கொன்று, அவர்களது வியாபாரம், சொத்துகளை அழித்து, அவர்களது பூர்வீகத் தாயகமான வடக்கு–கிழக்கிற்குத் துரத்தினீர்கள். பின்னர் போர் ஒன்றைத் தொடங்கி, வடக்கு–கிழக்குத் தமிழர்களை உலகெங்கும் அகதிகளாகத் துரத்தினீர்கள். அவர்களது காணிகளைப் பறிமுதல் செய்து சிங்கள மக்களைக் குடியேற்றினீர்கள்.

இன்று தமிழ் 2

## நிதி அமைச்சின் செயலாளருக்கு எதிரான
# நீதிமன்ற அவமதிப்பு மனுக்கள் நேற்றுப் பரிசீலனைக்கு ஏற்பு

நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவுக்கு எதிராகத் தாக்கல் செய்–யப்பட்ட நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டுத் தொடர்பான மனுக்களைப் பரிசீலனைக்கு எடுத்துள்ளது உயர் நீதிமன்றம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நிதியை நிறுத்தி வைத்து, உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுக்கு எதிராகச் செயற்பட்டு நீதிமன்றத்தை அவமதித்ததாக நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவுக்கு எதிராக இந்தத் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் ஆகியோர் இந்த மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, புவனேகா அலுவிஹாரே, பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட மற்றும் முர்து பெர்னாண்டோ ஆகிய ஐவரடங்கிய உயர் நீதிமன்ற ஆயம் முன்னிலையில் இந்த மனுக்கள் திங்கட்கிழமை பரிசீலனைக்கு எடுக்கப்பட்டன.

2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின் மூலம் உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதற்கு ஒதுக்கப்பட்ட நிதியை நிறுத்தி வைப்பதைத் தடுக்கும் வகையில் மார்ச் 3 அன்று நிதியமைச்சின் செயலாளருக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்ததைச் சுட்டிக்காட்டியுள்ள மனுதாரர்கள், அவர் உட்படமற்றைய அதிகாரிகளும் அந்த உத்தரவைச் செயற்படுத்தாமல் நீதிமன்றத்தை அவமதித்துள்ளார்கள் என்று தெரிவித்திருக்கின்றனர். இந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பதை உயர் நீதிமன்றம் பரிசீலிக்கத்தொடங்கியுள்ளது. இந்தப் பரிசீலனையில் மனுக்களை விசாரணைக்கு ஏற்றுக் கொள்வது என்று மன்று தீர்மானித்தால் மட்டுமே தொடர்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்படும்.

# தையிட்டியில் போராட்டம் நடத்திய 9 பேர் இன்று கைது



### நீதிமன்ற அனுமதி இருந்தும் பொலிஸார் அடாவடி

**தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரைக்கு எதிராக மீண்டும் போராட்டம் நடத்திய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆதரவாளர்கள் 9 பேர் இன்று கைது செய்யப்பட்டனர். கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனையும் போராட்ட இடத்திலிருந்து குண்டுக் கட்டாகப் தூக்கிச் சென்று அப்புறப்படுத்தினர் பொலிஸார்.**

**தையிட்டியில் படையினரின் உதவியுடன் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரைக்குக் கலசம் வைக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதைத் தொடர்ந்து அந்த விகாரையை அகற்றும்படி வலியுறுத்தி கடந்த வெசாக் தினத்தையொட்டி போராட்டம் இடம்பெற்றது. மூன்று நாட்கள் இடம்பெற்ற போராட்டம் பின்னர் முடிவுக்குக் கொண்டுவரப் பட்டது.** 2

## உரும்பிராயில் ஹெரோயினுடன் பெண் கைது



உரும்பிராயில் 50 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் 28 வயதுடைய பெண் ஒருவர் கைது செய்–யப்பட்டுள்ளார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் ஏற்கனவே ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு நான்கு மாதங்கள் சிறையிலிருந்த பின்னர் விடுதலையானவர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அந்த வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் மீண்டும் ஹெரோயின் போதைப் பொருளுடன் குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண்ணின் கணவரும் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுத்தற்பொழுது சிறைவாசம் அனுபவித்து வருகிறார் எனவும் பொலிசார் தெரிவித்தனர் (03)

### நாடுகளுடனான அபிவிருத்தி ஒப்பந்தங்களை நிறுத்த
## இனி நாடாளுமன்ற அங்கீகாரம் தேவை

இரண்டு அரசுகளுக்கிடையே செய்துகொள்ளப்படும் அபிவிருத்திஒப்பந்தம்ஒன்றை நாடாளுமன்றத்தின் முறையான அனுமதியின்றி இனி இடைநிறுத்த முடியாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார்.

வெளிநாட்டுமுதலீடுகளைப் பாதுகாக்கும் வகையில், சர்வதேசநம்பகத்தன்மையைஉறுதிப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும், அவ்வாறான நம்பகத்தன்மையை ஏற்படுத்துவது முக்கியம் என்றும் கூறிய அமைச்சர், அதற்காகவே இந்தநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இன்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

சில திட்டங்கள் பெரும் பொருளாதார நன்மைகளை வழங்குகின்றன. உதாரணமாக மகாவலி திட்டம் விவசாயத்துறையில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியது. சில திட்டங்கள் திடீரென இடைநிறுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக, ஜப்பானுடன் செய்துகொள்ளப்பட்ட இலகு ரயில்திட்டத்துக்கானஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இனிமேல் இவ்வாறான திட்டங்கள் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டும் என்றும் நாடாளுமன்றத்தின் அனுமதியின்றி இவ்வாறான திட்டங்களை இடைநிறுத்தக் கூடாது என்றும் ஜனாதிபதி நேற்று அமைச்சரவைக்கு அறிவித்தார்.

வெளிநாட்டுமுதலீட்டாளர்கள் இந் நாட்டில் முதலீடு செய்வதற்கு, எமதுநாட்டின்மீது அவர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்த வேண்டும். இரண்டு அரசாங்கங்களுக்கிடையில் ஒரு திட்டம் உருவாக்கப்பட்டால், அதை ஒரே இரவில் மாற்ற முடியாது. நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் பிரேரணைகளை அனுமதியின்றி மாற்ற முடியாது.

புதிய அபிவிருத்திச் செயற்திட்டங்களை மதிப்பீடு செய்வதற்கு தேசிய அபிவிருத்திக் குழு ஒன்றை உருவாக்கு–வதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது – என்றார்.

## கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பில்அமைந்துள்ள ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவரகத்துக்கு முன்னதாக இன்று ஒரு குழுவினர் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கொழும்பில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவரகம் அதன் செயற்பாடுகளை இலங்கையில் நிறுத்துவதற்கு முன்னதாக இலங்கைக்கு அகதிகளாக வந்துள்ளவர்களுக்கு நியாயமான தீர்வொன்றைப் பெற்றுக்கொடுக்குமாறு அவர்கள் கோரினார்கள்.

குறிப்பாக, தமக்கு வேறு நாடுகளில் புகலிடம் பெற்றுத் தருமாறு கோரிய அவர்கள் அது தொடர்பான தமது கோரிக்கையையும் எழுத்து மூலமாகச் சமர்பித்துள்ளனர்.

## ஓமந்தையில் இன்று காலை குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(ந.லோகதயாளன்)



வவுனியா ஓமந்தையில் முன்பகை காரணமாக இன்று காலை குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வேலர்சின்னக்குளத்தைச் சேர்ந்த, 52 வயதான ஒருவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டார். கொலையைச்செய்தவர் என்று சந்தேகிக்கப்படும் ஒருவரை துப்பாக்கியுடன் கைது தாம் கைது செய்திருக்கின்றனர் என்றும் பொலி–ஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் தனது தென்னந்தோப்பில் இருந்த போது சந்தேகநபர் மறைந்திருந்து அவரைச் சுட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டவருக்கும் உயிரிழந்தவருக்கும் இடையில் மிக நீண்ட காலமாக நிலவிய தனிப்பட்ட பகை காரணமாகவே இந்தக் கொலை நடந்துள்ளது என்று பொலிஸார் நம்புகின்றனர்.

## யாழ்ப்பாணத்திலிருந்து கேதீச்சரத்திற்கு 40 ஆண்டுகளின் பின்னர் கொடிச் சீலை

### சடங்கு ரீதியாக இன்று கொண்டு செல்லப்பட்டது



வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயவருடாந்தமகோற்சவப் பெருவிழாவுக்காக 40 வருடங்களுக்கு பின்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிச்சீலை திருக்கேதீஸ்வரம் ஆலயத்திற்கு 2

## மொட்டுக் கட்சி எம்பி இன்று 3.5 கிலோ தங்கத்துடன் கைது



பொது ஜன பெரமுன (மொட்டு) கட்சியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தங்கக் கட்டிகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து மூன்றரைக் கிலோ தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

மத்திய கிழக்கு நாடு ஒன்றிலிருந்து நாடு திரும்பிய நாடாளுமன்ற உறுப்பினர் ரஹீம் தங்கத்தைக் கடத்திவர முற்பட்டார் என்று அதிகாரிகள் குற்றஞ்சாட்டுகின்றனர். அவரிடம் சுங்க அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்தத் தங்கக் கடத்தல் குறித்து அரசியல் தலையீடு ஏதுமின்றி 2

# தேர்தலை நிறுத்தியாவது நாட்டை நிமிர்த்தி இருக்கிறார் ஜனாதிபதி

## மொட்டு எம்.பி. பாராட்டு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலை நிறுத்தியாவது ஓரளவாவது இந்த நாட்டை நிமிர்த்தி இருக்கின்றார் – என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமு–னவின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படுவதை நாம் எதிர்க்கவில்லை. இப்போதும் மொட்டுக் கட்சி என்ற அடிப்படையில் நாம் தேர்தலுக்குத் தயாராகவே உள்ளோம்.

ஆனால், நிதி அமைச்சராக இருக்கின்ற ஜனாதிபதி அதற்குப் பணமில்லை என்கிறார். எம்மால் ஒன்றும் செய்ய முடியாது. தேர்தலை நிறுத்தியாவது ரணில் ஓரளவாவது இந்த நாட்டை நிமிர்த்தி இருக்கின்றார். அதை நாம் ஆதரித்தே ஆகவேண்டும்.

அதைவிடுத்து விமர்சனங்களை முன்வைப்பதை நாம் தவிர்க்கவேண்டும். – என்றார். (02)

# இத்தாலி விபத்தில் இலங்கையர் சாவு!



இத்தாலியின் பெர்கமோவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கையர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதன்போது பேர்காமோவைச் சேர்ந்த வர்ணகுலசூரிய சஞ்சீவ பிரதீப் பெர்னாண்டோ என்ற 45 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

சஞ்சீவ பிரதீப் தனிப்பட்ட நோக்கத்திற்காக சைக்கிளில் பயணித்த போது அதே திசையில் சென்ற லொறியில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பேர்கம போக்குவரத்து பொலிஸார் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் படுகாயமடைந்த சஞ்சீவ பிரதீப் அவசர அம்புலன்ஸ் ஊடாக வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்தில் உயிரிழந்த சஞ்சீவ பிரதீப் இலங்கையின் மாரவில பிரதேசத்தை வசிப்பிடமாகவும், 20 ஆண்டுகளுக்கும் மேலாக இத்தாலியில் தனது குடும்ப உறுப்பினர்களுடன் வசித்து வருகிறார். (05)

# புலிகளின் தலைவர் இல்லை தயாமோகன் பரபரப்பு தகவல்

விடுதலைப் புலிகளின் தலைவர் கடந்த 2009, மே மாதம் 17 ஆம் திகதி வீரச்சாவை தழுவிக்கொண்டார் என விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளரும், தற்போது புலம்பெயர் நாடொன்றில் வாழ் பவருமான தயாமோகன் தெரிவித்துள்ளார். முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை மையப்படுத்தி அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். 14 ஆண்டுகளுக்கு பின்னர் இவ்வாறு தெரிவித்துள்ள அவர் மே 17ஆம் திகதி தான் முள்ளிவாய்க்கால் நினைவு நாள் எனவும் கூறியுள்ளார்.

அத்தோடு விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறையின் பொறுப்பாளர் பொட்டு அம்மானும் இறுதிப்போரில் வீரச்சாவடைந்து விட்டார் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)



# ஹப்புத்தளை ஆலயத்துக்கு சந்நிதியான் ஆச்சிரம் உதவி

ஹப்புத்தளை – தொட்டுலாகலை பிரதேசத்தில் அமைந்துள்ள ஸ்ரீகதிர் வேலாயுத சுவாமி கோவில் கட்டட பணிக்காக 100,000 ரூபா நிதி நேற்று (திங்கட்கிழமை) வழங்கப்பட்டுள்ளது.

நிதியை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தனது தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று ஆலய நிர்வாகிகளிடம் வழங்கி வைத்தார். (05)

# இலங்கையில் உயரம் குறைந்த சிறுவர் எண்ணிக்கை அதிகரிப்பு

இலங்கையில் உயரம் குறைந்த சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 2021 ஆம் ஆண்டில் 5 முதல் 10 வயது வரையிலான சிறார்கள் மத்தியில் உயரம் குறைந்தவர்கள் எண்ணிக்கை 21 வீதமாக காணப்பட்டது.

எனினும், கடந்த 2022 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 26 வீதமாக உயர்வடைந்துள்ளது. மந்த போசனைக்கு உள்ளான சிறுவர் சிறுமியரே இவ்வாறு உயரம் குறைவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உயரம் குறைவது பொதுவாக போசாக்கின்மை பிரச்சினைகளால் ஏற்படுவது எனவும், இதனால் மூளை வளர்ச்சியும் பாதிக்கப்படும் எனவும் உலக உணவுத் திட்டத்தின் இணைப்புச் செயலாளர் வைத்தியர் கலன பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பிள்ளையொன்றின் வளர்ச்சியில் முதல் ஆயிரம் நாள்கள் மிகவும் முக்கியமானது எனவும், அதன் அடிப்படையில் அடுத்த 7000 நாள்களில் கிரமமான வளர்ச்சி இருக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார். வடமத்திய மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் வைத்து அவர் இந்த விடயங்களை சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் நிலவிவரும் பொருளாதார நெருக்கடி நிலைமைகளால் பெரும்பானலானவர்களால் போசாக்கான உணவை உட்கொள்ள முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது என பல்வேறு தரப்பினரும் குற்றம் சுமத்தி வருகின்றனர். (05)

## ஆடைத்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதத்தில்தான் அதன் மிகக் குறைந்த வருவாயைப் பதிவு செய்தது.

அமெரிக்காவிற்கான ஆடை ஏற்றுமதி ஏப்ரல் மாதத்தில் 25.5% குறைந்துள்ளது. ஐரோப்பிய சந்தைக்கான ஏற்றுமதி 27.53% குறைந்துள்ளது மற்றும் இங்கிலாந்துக்கான ஆடை ஏற்றுமதி 26.7% குறைந்துள்ளது.

## சிங்களக்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் பூர்வீக நிலமான முல்லைத்தீவு மணலாற்றை மகாவலி அபிவிருத்தி என்ற பெயரில், சிங்கள மக்களுக்குத் தாரைவார்த்துக் கொடுத்து, வெலிஓயா என்று பெயரையும் சூட்டியுள்ளீர்கள். மகாவலி 'எல்"வலயம் என்று சொல்லப்படும் இந்தப் பிரதேசத்திற்கு இதுவரையில் மகாவலி நீர் எட்டிப்பார்த்ததும் கிடையாது. எட்டிப் பார்க்கப் போவதுமில்லை. மாறாக, அந்நிலங்களில் பூர்வீகமாக பயிர்செய்த தமிழ் மக்களின் காணிகள் பறிமுதல் செய்யப்பட்டு, சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ளார்கள்.

இன்று மகாவலி 'எல்' வலயத்திற்கே அந்நதியின் நீர் வராத நிலையில், நெடுங்கேணி, மாங்குளம், வவுனிக்குளம், துணுக்காய் போன்ற பிரதேசங்களை உள்ளடக்கி மகாவலி 'ஜே' என்னும் புதியதோர் வலயத்தை உருவாக்குகிறீர்கள். இதுவும் 'எல்' வலயம் போன்று சிங்களக் குடியேற்றங்களுக்கே தவிர, இங்கு மகாவலி நீர் வரப்போவது கிடையாது.

இந்தபி புதிய வலயம் தொடங்கப்படுவதற்கு முன்பாகவே, நெடுங்கேணியில் 1000 ஏக்கர் நிலத்தை சீனி உற்பத்தி நிலையம் என்று பினாமி நிறுவனமான தாய்லாந்தைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றிற்கு, கரும்பு பயிருடுவதற்குக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறு சுவீகரிக்கப்படவுள்ள நிலங்கள் ஏற்கனவே மத்தியதர வகுப்பினருக்குப் பிரித்து வழங்கப்பட்ட நிலங்கள் ஆகும்.

போர் காரணமாக அந்த நிலங்கள் காடு மண்டிப்போக, அவற்றை வன இலாகாவிற்–குச் சொந்தமான காணிகள் எனக்கூறி, அவற்றை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்க முயற்சிப்பது கண்டிக்கத்தக்கதும் கண்டனத்திற்குரியதுமாகும்.


இவ்வாறாகக் கரும்பு பயிரிடுவதற்கு எத்தனையாயிரம் சிங்களக் குடும்பங்கள் மணலாற்றில் குடியேற்றப்படும் என்பது யாருக்கும் தெரியாது. மணாலாற்றிற்கு நேர்ந்ததுதான் நெடுங்கேணி, மாங்குளம், வவுனிக்குளம் போன்றவற்றிற்கும் ஏற்படும் என்பதை தமிழ் மக்களும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் மனதில் கொள்ளவேண்டும்.

ஏற்கனவே திருகோணமலையைச் சுற்றிவளைத்து சிங்களக் குடியேற்றத்தின் மூலம், எவ்வாறு சேருவாவில என்ற சிங்கள தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டதோ, அதே போல வவுனியாவைச் சுற்றிவளைத்து, சிங்கள குடியேற்றங்களைக் கொண்டுவருவதற்கான ஒரு திட்டமாகவே இது இருக்கின்றது.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில், மகாவலி அபிவிருத்தி என்பது முழுக்க முழுக்க சிங்கள குடியேற்றங்களுக்கே என்பதை தமிழ்க் கட்சிகள் புரிந்துகொள்ள வேண்டும். மிகப் பெரும் விவசாய நிலப்பரப்பைக் கொண்ட வன்னி மண்ணைப் பாதுகாப்பதன் ஊடாகத் தமிழ் மக்களின் விவசாயம், பொருளாதாரத்தை நிலைநிறுத்த முடியும். மாறாக இவற்றை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பதனூடாக ஆட்சியாளர்கள் ஏதோவொரு வகையில் தான் நினைத்ததை நடைமுறைப்படுத்த முயற்சிக்கிறது என்பதையும் நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விவசாய நிலங்களைத் தாரை வார்ப்பதை தமிழ் மக்கள் முற்றுமுழுதாக நிராகரிப்பதுடன், வடக்கு மாகாண தமிழ் மக்களுக்கு மகாவலி அபிவிருத்தி சபை தேவையில்லை என்பதையும் ஆட்சியாளர்கள் புரிந்துகொண்டு, அதனை வடக்கு மாகாணத்திலிருந்து வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோருகின்றோம் – என்றுள்ளது.

# நீர்கொழும்பில் மனைவி கண் முன்பே கணவன் கொடூரமாக வெட்டிக்கொலை




இளம் குடும்பஸ்தர் ஒருவர் நான்கு பேர் கொண்ட கும்பலால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் நீர்கொழும்பில் இன்று காலை 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

29 வயதுடைய அன்ரனி றொபேட் என்ற இளம் குடும்பஸ்தரே இந்தச் சம்பவத்தில் சாவடைந்துள்ளார்.

அவர் தனது மனைவியுடன் வேலைக்குச் செல்ல ஆயத்தான போது முகமூடி அணிந்து கூரிய ஆயுதங்களுடன் காரில் வந்தவர்கள், அவரின் வீட்டுக்குள் புகுந்து தாக்குதலை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவத்தில் வெட்டுக் காயங்களுடன் இரத்தவெள்ளத்தில் கிடந்த இளம் குடும்பஸ்தர், அயலவர்களின் உதவியுடன் உடனடியாக நீர்கொழும்பு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்தச் சம்பவத்தை நேரில் பார்த்து அதிர்ச்சியடைந்த உயிரிழந்தவரின் மனைவி (வயது 25) மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த இளம் தம்பதியினருக்கு இரண்டு வயதில் ஓர் ஆண் குழந்தை உள்ளமை குறிப்பிடத்தக்கது.

சம்பவம் இடம்பெற்ற போது குறித்த குழந்தை அயல் வீடான தாத்தாவின் (உயிரிழந்தவரின் தந்தை) வீட்டில் இருந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடன் பகையே இந்தக் கொலைக்குக் காரணம் என்று பொலி–ஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார், கொலையாளிகளைக் கைது செய்வதற்கான நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். (02)

## யாழ்ப்பாணத்..



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துச்செல்லப்பட்டது. கொடிச்சீலை உபயகாரரான திருநெல்வேலி கென்னடி வீதியில் உள்ள சண்முகநாதன் கபிலன் வீட்டிலிருந்து கொடிச்சீலை எடுத்துச செல்லப்பட்டு திருநெல்வேலி வெள்ளைப் பிள்ளையார் ஆலயத்தில் வைக்கப்பட்டு அங்கு விசேட பூசைவழிபாடுகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து திருக்கேதீச்சர ஆலயத்திற்கு கொடிச்சீலை வாகனத்தில் எடுத்துச் செல்லப்பட்டது. திருக்கேதீஸ்வர ஆல யத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் தொடங்கவுள்ளது. 1982ஆம் ஆண்டிற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்தே திருக்கேதீஸ்வரத்திற்கு கொடிச்சீலை கொண்டு செல்லப்பட்டு வந்தது. போர்க் காலத்தில் அந்த முறை கைவிடப்பட்டிருந்தது.

கடந்த வருடம் திருக்கேதீஸ்வரத்திற்கு கும்பாபிஷேகம் நடைபெற்ற நிலை யில் 40 வருடங்களுக்கு பின்னர் மீண்டும் திருக்கேதீச்சர ஆலயத்திற்கு யாழ்ப்பா ணத்தில் இருந்து பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கி வைக்கப்பட்டது. அண்மையில் கொடிச் சீலை உபயகரார்களுக்கான களாஞ்சி வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றிருந்தது. (03)

## மொட்டுக்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேர்மையான வீசாரணை நடத்தப்படவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ன ராஜபகருணா தெரிவித்தார்.

"நாடாளுமன்ற உறுப்பினர் ரஹீம் கைது செய்யப்பட்டுள்ளார் என்ற செய்தி குறுஞ்செய்திப் பரிமாற்றமாக வந்துள்ளது. இந்த உறுப்பினரின் செயல் நாடாளுமன்றத்தில் உள்ள. 225 உறுப்பினர்களுமே கடத்தல்காரர்கள் என்று எண்ணத்தை ஏற்படுத்தும். அதனால் இந்தத் தங்கக் கடத்தல் குறித்து முறையான விசாரணை நடத்தப்படவேண்டும்" என்று அவர் வலியுறுத்தினார். பக்கச்சார்பற்றவகையில் இந்த விசாரணை நடத் தப்படவேண்டும் என்பதை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் நாடாளுமன்றத்தில் ஆதரித்தார்.

## தையிட்டி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் பின்னர் யாழ்ப்பாண சிவில் சமூகம் என்ற அமைப்பின் தலைவரான அருண் சித்தார்த் என்பவரால் ஒழுங்கு செய்யப்பட்டு விகாரைக்கு ஆதரவான ஒரு ஊர்வலமும் நடத்தப்பட்டது. ஊர்வலத்தில் வந்தவர்களுக்கு விகாரையிலேயே உணவும் வழங்கப்பட்டது.

இந்தப் பின்னணியில் தமிழ்த் தேசியப் பேரவை என்ற அமைப்பினால் விகாரைக்கு எதிராக மீண்டும் திங்கட்கிழமை முதல் தொடர் போராட்டம் அறிவிக்கப்பட்டது. இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த பலர் கலந்துகொண்டிருந்தனர்.

அவர்களது போராட்டத்திற்கு நீதிமன்றத் தடை உத்தரவு பெறப் பொலிஸார் முயன்றனர்.

ஆனால், விகாரைக்குச் செல்லும் பக்தர்களுக்கு இடையூறு இன்றியும் வீதியை மறிக்காமலும் போராட்டம் நடத்த நீதிமன்று அனுமதி வழங்கியது.

இதையடுத்து இன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை போராட்டம் நடைபெறும் என்று அறிவித்த தமிழ்த் தேசீயப் பேரவையினர், அனைவரையும் அதில் பங்கெடுக்குமாறு அழைப்பு விடுத்திருந்தனர்.

போராட்டம் தொடங்கியபோது அதில தமிழ்த் தேசிய மக்கள் முன் னணியைச் சேர்ந்தவர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

பகல் அங்கு திடீரென வந்த பொலி–ஸார் அங்கிருந்தவர்களைக் கலைந்து செல்லும்படி வற்புறுத்தினர். தமது பலத்தைப பயன்படுத்தி அவர்களை அங்கிருந்த அகற்ற முற்பட்டனர். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த கட்சியின் பேச்சாளர் சட்டத்தரணி சுகாஸ் உள்ளிட்ட 9 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமாரையும் போராட்ட இடத்திலிருந்து குண்டுக்கட்டாகத் தூக்கி வந்த பொலிஸார், சிறிது நேரம் அவரைத் தடுத்து வைத்திருந்தனர். பின்னர் விடுவித்தனர். அவர் அங்கு தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

# ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வீழ்ச்சிக்கு கோட்டா, மஹிந்த பொறுப்புக்கூறவேண்டும்

## சாடுகின்றார் எஸ்.பி.திஸாநாயக்க



நாட்டு மக்கள் பொதுஜன பெரமுனவுக்கு வழங்கிய ஆணை குறுகிய காலத்துக்குள் முழுமையாக இல்லாதொழிந்து பாரிய நெருக்கடிகள் தோற்றம் பெற்றதற்கு பொதுஜன பெரமுனவின் அரச தலைவர்களான கோட்டாபய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ச உட்பட முழு அமைச்சரவையும் பொறுப்புக் கூற வேண்டும் என ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

பத்தரமுல்ல பகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு –

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் அதிகாரத்தில் இருந்த பழைமையான கட்சிகளை பலவீனப்படுத்தும் வகையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அமோக வெற்றி பெற்றது.

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலிலும், 2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலிலும் பொதுஜன பெரமுன அமோக வெற்றி பெற்று மக்களாணையை உறுதிப்படுத்தியது.

விருப்பு தேர்தல் முறைமை ஊடாக எந்த அரசியல் கட்சிக்கும் தனித்து ஆட்சி அமைக்க முடியாது என முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன குறிப்பிட்ட கருத்தை முழுமையாக தோற்கடிக்கும் வகையில் பொதுஜன பெரமுன பொதுத் தேர்தலில் வெற்றிபெற்றது.

பாரிய எதிர்பார்ப்புக்கு மத்தியில் மக்கள் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலை மையில் அரசாங்கத்தை தோற்றுவித்தார்கள்.

குறுகிய காலத்துக்குள் பொதுஜன பெரமுன அரசாங்கம் மக்களால் வெறுக்கப்பட்டு அதளபாதாளத்துக்கு சென்று முழுமையாக இல்லாதொழிந்தது. இதற்கு பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி, பிரதமர் உட்பட அமைச்சரவை முழுமையாக பொறுப்புக் கூற வேண்டும்.


காலி முகத்திடல் போராட்டகளத்துக்கு இடமளிக்க வேண்டாம். ஜனநாயக போராட்டம் என்ற போர்வையில் தோற்றம் பெற்றுள்ள போராட்டம் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிடம் எட்டு முறை குறிப்பிட்டேன்.

அப்போதைய அமைச்சரவையில் இருந்தவர்களில் ஒருசிலர், 'காலி முகத்திடல் போராட்டம் ஜனநாயகமானது, ஆகவே போராட்டத்துக்கு இடையூறு விளைவிக்க வேண்டாம்' எனக் குறிப்பிட்டார்கள். அவர்கள் தற்போதைய அமைச்சரவையிலும் அங்கம் வகிக்கிறார்கள்.

காலி முகத்திடல் ஜனநாயக போராட்டம் இறுதியில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியது. அரசியல் நெருக்கடி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவித்தது. ஜனாதிபதியின் தீர்மானங்களால் நாடு தற்போது வழமைக்கு திரும்பியுள்ளதையிட்டு மகிழ்ச்சியடைய வேண்டும்.

நாடு என்ற ரீதியில் எதிர்கொண்ட பாரிய நெருக்கடி, தற்போதைய நிலைமை ஆகியவற்றை ஒரு படிப்பினையாகக் கொண்டு சகல அரசியல் கட்சிகளும் எதிர்வரும் காலங்களில் சிறந்த தீர்மானத்தை எடுக்க வேண்டும். அரசியல் நோக்கத்தை முன்னிலைப்படுத்திக்கொண்டு கட்சி அடிப்படையில் பிளவுபட்டால் நாட்டு மக்கள் அரசியலை முழுமையாகப் புறக்கணிப்பார்கள். – என்றார். (05)

# பத்தனை ஸ்ரீபாத கல்வியியந் கல்லூரியில் பயிந்சி மாணவர்கள் 92 பேருக்கு சுகவீனம்!




பத்தனை ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியில் பயிற்சி பெறும் சுமார் 92 மாணவர்கள் திடீர் சுகவீனத்துக்குள்ளாகி கொட்டகலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

சளி, இருமல் மற்றும் காய்ச்சல் போன்ற நோய் அறிகுறிகள் தென்பட்டதையடுத்து அங்கு பயிற்சி பெறும் மாணவர்கள் வைத்தியசாலைக்கு சென்றுள்ளனர்.


வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சென்றவர்களில் 10 பேர் அங்கு தங்கி இருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும், ஏனையோர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக் பெற்றுக் கொண்டு வெளியேறியுள்ளனர் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் பத்தனை ஸ்ரீஊணபாத கல்வியியற் கல்லூரியில் ஏதேனும் வைரஸ் நோய் பரவுகின்றதா என்பது தொடர்பில் பரிசோதனை மேற்கொள்ளுமாறு சுகாதார பரிசோதகர்களுக்கு வைத்தியர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதனையடுத்து நேற்று (திங்கட்கிழமை) வைத்தியசாலைக்கு சென்ற சுகாதார அதிகாரிகள் அங்கு பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளனர். அத்துடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுபவர்களின் இரத்த மாதிரிகளும் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடதக்கது. (05)

# கொழும்பில் சிறுமியின் தவறான நட்பால் ஏற்பட்ட பெரும் விளைவு

## 3 இளைஞர்கள் கைது



நுகேகொடையில் உள்ள அரச பாடசாலை ஒன்றின் 13 வயது சிறுமி மூன்று இளைஞர்களால் தொடர்ச்சியாக பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளார்.

இந்த நிலையில் சிறுமி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனக் கிருலப்பனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கிருலப்பனை பிரதேசத்தை சேர்ந்த 19 மற்றும் 21 வயதுடைய இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

2022 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம், சிறுமியின் வீட்டுக்கு அருகில் நடந்த இறுதிச் சடங்கின் போது 23 வயது இளைஞனுடன் சிறுமி காதல் உறவில் ஈடுபட்டனர் எனத் தெரியவந்துள்ளது.

பின்னர் குறித்த நபர் சிறுமியை தெஹிவளை பிரதேச கடற்கரைக்கு அழைத்துச் சென்று சில மணித்தியாலங்களை கழித்த பின்னர் ஹோட்டல் அறைக்கு அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார் எனப் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

அந்த சம்பவத்துக்குப் பின்னர் சில மாதங்களில் சிறுமியின் வசிப்பிடத்துக்கு அருகில் உள்ள நண்பியின் சகோதரரான 21 வயதுடைய இளைஞனுக்கும் சிறுமிக்கு இடையில் காதல் தொடர்பு ஏற்பட்டுள்ளது.

அந்த இளைஞன், சிறுமியின் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் வீட்டுக்கு அவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்பிறகு, கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதியன்று, சிறுமியின் வீட்டில் நடந்த விருந்தின் போது, அதிகமாக மது அருந்திய 19 வயது இளைஞன் ஒருவர் சிறுமியை துஷ்பிரயோகம் செய்துள்ளார் என நீண்ட விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

தொடர்ந்து துஷ்பிரயோகத்துக்கு உள்ளான சிறுமி இது தொடர்பில் தனது நெருங்கிய தோழியிடம் தெரிவித்ததையடுத்து, அந்த நண்பி வகுப்பு ஆசிரியருக்கு தெரியப்படுத்தியுள்ளார். அதற்கமைய, கிருலப்பனை பொலிஸாரின் 1929 உதவி சேவைக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், சிறுமியை அழைத்து பொலிஸார் விசாரித்ததில், இந்த குற்றம் தொடர்பான தகவல்கள் வெளியாகின.

சிறுமியை முதலில் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய 23 வயதுடைய புஸ்ஸல்லாவ பிரதேசத்தை சேர்ந்த இளைஞனைக் கைதுசெய்ய விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிருலப்பனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# தாவரவியல் பூங்கா கட்டணம் ஜூலை மாதம் முதல் ஏற்றம்

எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் தாவரவியல் பூங்காவுக்கான நுழைவுக் கட்டணத்தை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தல் சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவால் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, இலங்கையர்களில் 60 வயதிற்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கு (அடையாள அட்டையைக் காண்பித்தல் வேண்டும்) 50 ரூபாவும், வளர்ந்தோர் (60 வயது வரை) மற்றும் 12 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு 200 ரூபாவும், 12 வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் மற்றும் பாடசாலை சீருடையில் வரும் மாணவர்களுக்கு 30 ரூபாவும் வசூலிக்கப்படவுள்ளது.

முன்பு பெரியவர்களுக்கு 100 ரூபாவும், சிறுவர்களுக்கு 20 ரூபாவும் கட்டணம் விதிக்கப்பட்டது.

வெளிநாட்டவர்களில் வளர்ந்தோர் மற்றும் 12 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு 3000 ரூபாவும், 12 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளுக்கு 1500 ரூபாவும், பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு (அதனை உறுதிப்படுத்த அடையாள அட்டை அல்லது ஏற்கத்தக்க ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்) 2000 ரூபாவும் அறவிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# நிந்தவூரில் உள்ள பழக்கடைகள் அனைத்திலும் திடீர் சோதனை







நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.எல்.எம். றயீஸின் வழிகாட்டலில் பழக்கடைகளின் தரத்தைப் பேணும் வகையில் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் அனைத்து பழக்கடைகளிலும் பரிசோதனை நடவடிக்கை நேற்று (திங்கட்கிழமை) மேற்கொள்ளப்பட்டது.

இதில் மக்களின் நுகர்வுக்குப் பொருத்த மற்ற பழங்கள் மற்றும் செயற்கையாக பழங்களை பழுக்க வைப்பதற்காக பயன்படுத்தகூடிய இரசாயனங்களும் கைப்பற்றப்பட்டு அனைத்தும் அழிக்கப்பட்டன.

இவ்வாறு பழங்களை செயற்கையாக பழுக்கவைக்க பயன்படுத்தப்படும் இரசாயனம் கலந்து தெளிக்கப்பட்ட பழங்களை சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அதன் இரசாயன தாக்கத்தின் விளைவுகளை அறியாமல் அதனை உட்கொண்டு பல நோய்களுக்குள்ளாகின்றனர்.

எனவே, இதனை தடுக்கும்பொருட்டு இவ்வாறு இரசாயனம் கலந்து தெளிப்பதனையும் இரசாயனம் தெளிப்பதற்கு பயன்படுத்த கூடிய உபகரணங்களையும் மற்றும் அழுகிய நிலையில் பழங்களையும் கண்டால் மக்கள் விழிப்புடன் இருந்து 0672250834 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தெரியப்படுத்துங்கள் என சுகாதார வைத்திய அதிகாரி றயீஸ் தெரிவித்தார்.

இப்பரிசோதனை நடவடிக்கையில் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.எல்.எம். றயீஸ், மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர், பொது சுகாதாரப் பரிசோதகர்கள், மற்றும் அலுவலக ஊழியர்களும் கலந்துகொண்டனர். (05)

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# கண்டனத்துக்குரியது

அமைதி வழிப் போராட்டங்கள் மீது காவல் துறையினர் அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுவது ஏற்புடையதல்ல. போராட்டம் நடத்துவதும் எதிர்ப்பைக் காண்பிப்பதும் ஒவ்வொருவருடையதும் உரிமை. அது மற்றையவர்களைப் பாதிக்காமலும் சமூக அமைதியைக் குலைக்காமலும் இருக்கவேண்டும் என்பதுதான் நியதி. அப்படி எந்தக் குழப்பங்களும் இல்லாத ஆர்ப்பாட்டங்களுக்கும் போராட்டங்களுக்கும் எதிர்ப்புகளுக்கும் நீதிமன்றங்களே அனுமதி வழங்குகின்றன. போராட்டக்காரர்கள் இந்த நியதிகளை மீறி நடந்தால் அப்போது அவர்கள் மீது காவல்துறையினரால் நடவடிக்கை எடுக்க முடியும் என்பதையும் பல தடவைகள் நீதிமன்றங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

அப்படியிருந்தும் தையிட்டியில் ஒரு சிறு குழுவினர் நடத்திய எதிர்ப்புப் போராட்டத்தைக் கலைத்து அதில் ஈடுபட்டவர்களைக் கைதுசெய்து என்று காவல்துறையினரர் அடாவடித்தனமாக நடந்துகொண்டுள்ளனர். ஏற்கனவே இந்தப் போராட்டத்தைத் தடுக்க திங்கட்கிழமை நீதிமன்றத்தை நாடிய காவல்துறையினர் மூலம் நீதிமன்றம் தெளிவான அறிவுறுத்தல்களைப் போராட்டக்காரர்களுக்கு வழங்கியிருந்தது. விகாரைக்குப் பக்தர்கள் செல்வதைத் தடுக்கக்கூடாது, வீதியை மறிக்கக்கூடாது, போக்குவரத்துக்கு இடையூறுகளை ஏற்படுத்தக்கூடாது என்பவையே அந்த நிபந்தனைகள். அதேபோன்று அந்த நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டுத் தாம் நடப்போம் என்று போராட்டக்காரர்களும் உறுதி கூறியிருந்தனர்.

அப்படியிருந்தும் போராட்டக்காரர்கள் எந்தவித சட்டமீறல்களிலும் ஈடுபடாதபோதும் அவர்கள் போராட்ட இடத்திலிருந்து விரட்டப்பட்டிருப்பதும் கைதுசெய்யப்பட்டிருப்பதும் காவல்துறையினரின் அடாவடித்தனமன்றி வேறெதுவுமாக இருக்க முடியாது. காவல்துறையினர் இதுபோன்ற விடயங்களில் சிங்களவர்களுக்கு ஒரு மாதிரியும் தமிழர்களுக்கு ஒரு மாதிரியும் நடந்துகொள்வதும் பல தடவைகள் அவதானிக்கப்பட்டுள்ளது. அண்மையில் திருகோணமலையில் புத்தர் சிலை வைக்கபடுவது தொடர்பில் இனப் பதற்றத்தைத் தோற்றுவித்த இடத்தில் தடைகளை மீறி பிக்குகளும் சிங்களவர்களும் சென்று பிரித் ஓதியபோது, அது இனப் பதற்றத்தை உருவாக்கக் கூடிய நடவடிக்கை என்று முன்கூட்டியே எச்சரிக்கப்பட்டிருந்தபோதும், காவல்துறையினர் முன்பாகவே அந்த அத்துமீறல் நடந்தபோதும் அதில் ஈடுபட்டவர்கள் எவரும் பலவந்தமாக அந்த இடத்திலிருந்து அகற்றப்படவுமில்லை, கைது செய்யப்படவுமில்லை.

ஆனால், தையிட்டியில் அமைதியாகப் போராட்டம் நடத்தியவர்கள் மீது, அதுவும் எந்த வித அச்சுறுத்தலையும் விடுக்காத ஒரு சிறு குழுவினருக்கு எதிராக சட்டத்தை இவ்வளவு தீவிரமாக, முறைகேடாக நடைமுறைப்படுத்தவேண்டிய தேவை என்ன வந்தது? பௌத்த சிங்கள மேலாதிக்கத்திற்கு ஆதரவான மனோநிலையிலிருந்து காவல்துறையினர் நடப்பதன் எதிரொலியன்றி வேறொன்றாகவும் இதனைக் கொள்ள முடியாது. இது கண்டனத்துக்குரியது. காவல்துறையினர் இதுபோன்ற நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தவேண்டும்.

# கனேடியப் பிரதமரின் கருத்தை அரசு எதிர்த்ததற்குக் கண்டனம்

## தெரிவித்தார் சுமந்திரன் எம்.பி.



இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பாக கனேடியப் பிரதமர் ஜெஸ்ரின் ட்ரூடோ வெளியிட்ட அறிக்கைக்கு கனேடிய உயர்ஸ்தானிகரை அழைத்து இலங்கை அரசாங்கம் தமது ஆட்சேபனைகளை தெரிவித்துள்ளமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டனம் வெளியிட்டுள்ளது.

இலங்கையின் இறுதிக் கட்ட யுத்த காலப் பகுதியில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக எந்தவொரு விசாரணைகளையும் மேற் கொள்ளாத இலங்கை அரசாங்கம் இவ்வாறு எதிர்ப்பு வெளியிடுவதில் எந்தவொரு நியாயமும் இல்லை என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை தான் என்றும், இந்த மோதலில் பாதிக்கப்பட்டவர்களதும், தப்பிப்பிழைத்தோரினதும் உரிமைகளுக்காகவும், இலங்கையில் தொடர்ந்தும் நெருக்கடியை எதிர்கொள்வோருக் காகவும் குரல் கொடுப்பதைக் கனடா நிறுத்த மாட்டாது என அந்நாட்டுப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ முள்ளிவாய்க்கால் நினைவேந்தலையொட்டி வெளியிட்ட அறிக்கைக்கு இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கண்டனம் வெளியிட்டதுடன் அதனை நிராகரித்துமிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. (05)

# தமக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளை சவாலுக்கு உட்படுத்தி மஹிந்த சிறிவர்த்தன மனு!



தமக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இரண்டு நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளை சவாலுக்கு உட்படுத்தி, திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன தனது சட்டத்தரணி ஊடாக ஆரம்ப ஆட்சேபனைகளை முன்வைத்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் ஆகியோர் தாக்கல் செய்த மனுக்களை ஆட்சேபித்தே இந்த மனு நேற்று தாக்கல் செய்யப்பட்டது.

முன்னதாக, உள்ளூராட்சி அமைப்பு தொடர்பாக வெளியிடப்பட்ட உயர் நீதிமன்ற உத்தரவுக்கு இணங்க தவறியதற்காக திறைசேரியின் செயலாளருக்கு எதிராக இந்த நீதிமன்ற அவமதிப்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த நிலையில், உயர்நீதிமன்றம் உத்தரவிட்டதற்கு அமைய, நிதி அமைச்சரின் உத்தரவின்றி அரசமைப்பின் கீழ், நிதியை விடுவிக்க, திறைசேரி செயலாளருக்கு அதிகாரம் இல்லை என்று அவரின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின் சரத்துகளின் கீழ், அமைச்சர் ஒருங்கிணைக்கப்பட்ட நிதியை விடுவிக்க உத்தரவைப் பிறப்பிக்கவேண்டும் என்று சட்டத்தரணி சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல் செலவினங்களை அத்தியாவசிய செலவுகளாக சுட்டிக்காட்டாமல் அத்தியாவசிய செலவுகளுக்கு மட்டுமே நிதி ஒதுக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

எனவே, இப்போது அரசமைப்பின் கீழ், அத்தகைய நிதியை விடுவிக்க திறைசேரியின் செயலாளருக்கு அதிகாரம் இல்லையென சட்டத்தரணி குறிப்பிட்டுள்ளார். (05)

# வீதியில் கிடந்த 4 லட்சம் ரூபா உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது

## காத்தான்குடியில் சம்பவம்



காத்தான்குடியில் 4 லட்சம் ரூபா பணத்தை வீதியில் கண்டெடுத்த தமிழ், முஸ்லிம் சகோதரர்கள் காத்தான்குடி பொலிஸார் முன்னிலையில் உரியவரி டம் ஒப்படைத்துள்ளனர்.

காத்தான்குடியைச் சேர்ந்த றிஸ்வி என்பவரின் 4 லட்சம் ரூபா பணம் நேற்று (திங்கட்கிழமை) காத்தான்குடி ஆறாம் குறிச்சி இரும்புத்தைக்கா பள்ளிவாயல் வீதியில் வைத்து காணாமல் போயுள்ளது.

சீனியை கொள்முதல் செய்வதற்காக இந்த பணத்தைக் கொண்டு செல்லும் போது காணாமல்போனதாக தெரியவருகின்றது.

இதனையடுத்து காத்தான்குடி முதலாம் குறிச்சி ஹுசைனிய்யா வீதியைச் சேர்ந்த முயீனுல் ஹக் மற்றும் கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த தெய்வநாயகம் தெய்வேந்திரன் ஆகிய இருவரும் ஒரே நேரத்தில் பணம் வீதியில் கிடப்பதை கண்டுள்ளனர்.

இப்பணத்தைஎடுத்துக்கொண்டு இருவரும் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்ததையடுத்து பணத்தை அடையாளப்படுத்தப்பட்டு உரியவரை காத்தான்குடி பொலிஸ்நிலையத்துக்கு வரவழைத்து பணத்தை ஒப்படைத்துள்ளனர்.

காத்தான்குடி பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறி மற்றும் காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எஸ்.எம்.ரஹீம் பொலிஸ் பரிசோதகர் எஸ்.ஐ. சியாம் ஆகியோர் முன்னிலையில் பணத்தை ஒப்படைத்துள்ளனர்.

பணத்தை கண்டெடுத்து பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்த இருவருக்கும் பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி உட்பட பொலிஸ் அதிகாரிகள் பாராட்டுக்களை தெரிவித்ததுடன், பணத்தை தொலைத்தவர் கண்டெடுத்தவர்களுக்கும் பொலிஸாருக்கும் தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளார். (05)

# பொலன்னறுவையில் ஆசிரியரால் பல மாணவிகள் துஷ்பிரயோகம்!



பொலன்னறுவையில் பாடசாலை மாணவிகளை ஆசிரியரொருவர் துஷ்பிரயோகம் செய்துள்ளார் எனப் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

விஜயபாபுர பிரதேசத்தில் தனியார் ஆங்கில ஆசிரியர் ஒருவரால் கடந்த ஜனவரி மாதம் முதல் இது வரை காலமும் தமது மகள்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என 6 சிறுமிகளின் பெற்றோர் பொலன்ன றுவை பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்துள்ளனர்.

இந்த ஆசிரியர் அந்த பகுதியில் ஏராளமான சிறுமிகளை துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கியுள்ளார் எனவும், ஆனால் சமூகத்தின் முன் பிள்ளைகள் அவமானப்படுத்தப்படுவார்கள் என்ற அச்சத்தில் பல பெற்றோர்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்வதை தவிர்த்தனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான பிள்ளைகள் 12-15 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

பெற்றோர்கள் செய்த முறைப்பாடுகளுக்கமைய, சந்தேகத்திற்குரிய 40 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான தனியார் ஆங்கில ஆசிரியர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலன்னறுவை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலன்னறுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)